விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

*Valampurii*

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com


கலயாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 18 வெள்ளிக்கிழமை (04.09.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 259

## குபேரவாசல் கோபுரம் கும்பாபிஷேகம் இன்று



(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தன் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 108 அடி உயரமான குபேரவாசல் கோபுரத்திற்கு இன்று காலை 6 மணிக்கு 23ஆம் பக்கம் பார்க்க....

## நாடாளுமன்ற எதிர்க்கட்சியின் தலைவரானார் இரா.சம்பந்தன்

(கொழும்பு)

இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற குழுத்தலைவர் இரா.சம்பந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை காலை நாடாளுமன்றம் கூடியபோது சபா நாயகர் கரு ஜெயசூரிய இதனை அறிவித்தார்.

நாடாளுமன்றம் கூடியதும் இது குறித்த அறிவிப்பை வெளியிட்ட சபா நாயகர் கரு ஜெயசூரிய, எதிரக்கடசித் தலைவரின் நியமனம் சம்பந்தமாக ஐக்கிய மக் 23ஆம் பக்கம் பார்க்க....



# சர்வதேச விசாரணையே தமிழர்களின் எதிர்பார்ப்பு


## அரியாலையில் புகையிரத விபத்து; உடல் துண்டுகளாகி இளைஞன் பலி





23ஆம் பக்கம் பார்க்க....

## எமக்குள் சிலர் அதனை குழப்புகின்றனர் - ஆனந்தன்



(வவுனியா) சர்வதேச விசாரணை கோரியே தமிழ் மக்கள் எமக்கு வாக்களித்தனர். ஆனால் சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது என எம்மில் சிலர் மக்களைக் குழப்புகிறார்கள். இது மனவேதனையைத் தருகிறது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

### சர்வதேச விசாரணையை வலியுறுத்தி

## யாழில் இன்று மாலை 4 மணிக்கு மாபெரும் கையெழுத்து போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இடம்பெற்ற சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமை சட்ட மீறல்களை புரிந்தோர்க்கு எதிராக சர்வதேச குற்றவியல் செயன்முறைப் பொறிமுறையொன்றினை ஏற்படுத்தக் கோரி இன்று வெள்ளிக்கிழமை யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில மாலை நான்கு மணியளவில் மாபெரும் கையெழுத்து போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனை சர்வதேச பொறுப்புக் கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக்குழு ஏற்பாடு செய்துள்ளது. 24ஆம் பக்கம் பார்க்க....

## அரசுக்கு 56ஐ விட 16 பெரிதாகிவிட்டது

### சம்பந்தனுக்கு தினேஷ், விமல், உதய எதிர்ப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 56 உறுப்பினர்கள் கையெழுத்திட்ட கடிதம் சபாநாயகரிடம் வழங்கப்பட்டிருந்த நிலையில், 16 உறுப்பினர்களை கொண்டுள்ள கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்கியது தவறானது எனவும் அது ஜனநாயக விரோதம் எனவும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் அடுத்த 15 நாட்களுக்கு பின்னரே மீண்டும் கூடும். அதற்கு முன்னர் சபாநாயகரை சந்தித்து தவறை திருத்திக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்க உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் நேற்று 23ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சர்கள் அதிகரிப்பு சம்பந்தன் எதிர்ப்பு

(கொழும்பு)

அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

தேசிய அரசாங்கத்தில் அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யோசனை ஒன்றை முன் வைத்தார்.

எனினும் புதிதாக தெரிவு செய்யப்பட்ட எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தன் இந்த யோசனைக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

முதல் தடவையாக எதிர்க்கட்சித்தலைவராக பாராளுமன்றில் உரையாற்றிய போது சம்பந்தன் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 1.2 பில்லியன் 24ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சர்களை அதிகரிக்கும் பிரேரணை நிறைவேறியது

(கொழும்பு)

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையை 48 ஆக அதிகரிப்பது தொடர்பான பிரேரணை பாராளுமன்றத்தில் நேற்று மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த பிரேரணை மீதான விவாதத்தை அடுத்து, நேற்று மாலை வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தது.

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஐ விட அதிகரிக்கக்கூடாதென தெரிவிக்கப்பட்டுள்ளது. 23ஆம் பக்கம் பார்க்க....

## கண்காட்சியில் பிரபாவின் கைவிரல் அடையாளம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் கைவிரல் அடையாளம் கண்காட்சியொன்றில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு லயனல் வென்ட் அரங்கில் நடைபெற்று வரும் பொலிஸ் புகைப்படக் கண்காட்சியில், பிரபாகரனின் கைவிரல் அடையாளம் கொண்ட புகைப்படமும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

1912-ம் ஆண்டு முதல் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய ஆறு லட்சம் 24ஆம் பக்கம் பார்க்க....

## கொலைக்குற்றச்சாட்டு 10 வருடங்களின் பின் நிரபராதி எனத் தீர்ப்பு

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரியொருவரை கொலை செய்தார் எனக் குற்றஞ் சாட்டப்பட்ட சந்தேகநபருக்கு எதிரான குற்றம் நிரூபிக்கப்படாமையால் 10 வருடங்களின் பின் அவரை நிரபராதி என தீர்ப்பளித்து யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்றையதினம் விடுதலை செய்துள்ளார்.

கடந்த 2005ஆம் ஆண்டு ஓகஸ்ட் 4ஆம் திகதி இணுவில் பிரதேசத்தில் யாழ்.பொலிஸ் அத்தியட்சகரான 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனின் மரணம் பற்றி— எவருக்கும் சரியாக தெரியாது

## துல்லியமான தகவல் இல்லை என்றார் - கே.பி

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரணம் தொடர்பில் எவராலும் சரியான தகவல்களை வெளியிட முடியாது என புலிகளின் முன்னாள சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் எனப்படும் கே.பி தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் எவ்வாறு உயிரிழந்தார் என்பது பற்றி தோண்டித் தேடுவதனை விட, அரசாங்கத்துடன் இணைந்து மக்களுக்கு சேவையாற்றுவதற்கு அனைவரும் இணைந்து கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

குமரன் பத்மநாதன் பிரபாகரனுடன் மிக நெருங்கிய தொடர்புகளைப் பேணியவர் என்ற வகையில் இறுதிக் கட்ட யுத்தத்தின் போதும் தொடர்பு பேணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது என்றும் பிரபாகரனின் இறப்பு பற்றி துல்லியமாக கூற எவராலும் முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது, பிரபாகரனுடன் இருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எவரும் உயிருடன் இல்லை. சிலருடன் நான் தொடர்பு கொண்டுகள நிலைவரங்களை அறிந்து கொண்டிருந்த போதிலும் நந்திகடல் பகுதியில் நடைபெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது அவர்கள் எவரும் உயிருடன் இருக்கவில்லை.

எனவே பிரபாகரன் எவ்வாறு உயிரிழந்தார் என தற்போது கூறுவது சாத்தியப்படாத விடயமாகும். மூன்று தசாப்த காலமாக நீடித்த யுத்தம் காரணமாக இலங்கையர்கள் பாரியளவில் அழுத்தங்களையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்க நேரிட்டது.

இறுதிக் கட்ட யுத்தத்தின்போது நானே அதிகளவு தொடர்புகளை விடுதலைப் புலிகளுடன் பேணி வந்தேன், என்னாலேயே பிரபாகரனுக்கு என்ன நேர்ந்தது என்பதனை குறிப்பிட முடியாதுள்ளது.

இப்போது நான் சிறுவர் இல்லமொன்றை தன்னார்வ அடிப்படையில் நடத்திச் செல்வதற்காக நேரத்தை செலவிட விரும்புகின்றேன. மாறாக அரசியல் தேவைகளுக்காக தேவை அற்ற கருத்துக்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் எனக்கு கிடையாது என கே.பி தெரிவித்துள்ளார். (செ-12)

## பனிக்கன்குளம் பகுதியில் விபத்து




(மாங்குளம்)

பனிக்கன்குளம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் மூவர்காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, வீட்டிற்கு நிலையம் பார்ப்பதற்கென சாவகச்சேரியிலிருந்து அழைத்துச் சென்ற நபரை அவரது வீட்டில் கொண்டு சென்றுவிடுவதற்கென வவுனியாவிலிருந்து அழைத்துச் சென்ற வேளையில் மாங்குளம்-பனிக்கன்குளம் பகுதியில் அமைந்துள்ள வீதி வளைவில் திரும்பிய போது வாகனத்தின் முன்சில்லு காற்றுப் போய் வாகனம் வீதியை விட்டு விலகி தலைகீழாக புரண்டுள்ளது.

இதில் வாகனத்தில் பயணம்செய்த மூவர் காயமடைந்து மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-281)

## கோத்தா மீது— தொடர் விசாரணை

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் பாரிய மோசடி தடுப்பு ஜனாதிபதி ஆணைக்குழு 4 மணித்தியாலங்கள் விசாரணை மேற்கொண்டுள்ளது.

நிதி மோசடி சம்பவம் தொடர்பில் வாக்கு மூலம் பதிவு செய்வதற்காக கோத்தபாய ராஜபக்ஷ நேற்று காலை 9.30 மணிக்கு ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தார். பகல் 1.30 மணிவரை அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் விசாரணைகள் மேற்கொள்ள வேண்டி இருப்பதனால் இன்றும் பாரிய மோசடி தடுப்பு ஜனாதிபதி ஆணைக்குழு முன் ஆஜராகுமாறு கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷ தவிர மேலும் 09 பேர் நேற்று பாரிய மோசடி தடுப்பு ஜனாதிபதி ஆணைக்குழுவினால் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்ததுடன், அவர்களையும் இன்று மீண்டும் ஆஜராகுமாறு பணிக்கப்பட்டுள்ளது. (செ-12)


## தவறிவிட்டது

28/08/2015 அன்று பூநகரியில் உள்ள உறவினர் வீட்டின் புதுமனைப் புகுவிழாவிற்கு சென்று விட்டு அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஹயஸ் வாகனத்தில் திரும்பி வந்த வேளை பயணப்பை தவறவிடப்பட்டுள்ளது.

கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (1668)

தொடர்புகளுக்கு: 0776389482

## வேலையாட்கள் தேவை

லைடன் புடைவை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.
அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது.
(கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்)

**லைடன் புடைவை நிலையம்**
**410, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(C-2016)

## தேவை

மிக மிக அனுபவமுடைய மேசன், சட்டறிங் கூலி வேலை ஆட்கள் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
(1671)

தொடர்புகளுக்கு :
0777302343


## கண்ணீர் அஞ்சலி



எமது சக தோழர் **ம.தர்ஷன்**
(கிளை முகாமையாளர்-
நல்லூர் ப.நோ.கூ சங்கம்)
அவர்களின் அன்புத்தந்தை

**முருகுப்பிள்ளை மனோகரன்**

அவர்களின்
மறைவினால் அவரது
குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள
துயரில் நாமும் பங்கு
கொள்வதோடு அன்னாரின்
ஆத்மா சாந்திக்காகவும்
பிரார்த்திக்கின்றோம்.
(1674)

**கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்**
**கிளை - நல்லூர் ப.நோ.கூ சங்கம்**

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை கந்தசாமி

மலர்வு: 10.03.1940 உதிர்வு: 01.09.2015

வேலணையை பிறப்பிடமாக கொண்டவரும் தொண்டைமானாறு செல்வசந்நிதியை வசிப்பிடமாகவும் கொண்ட, எமது சங்கத்தின் நீண்டகால உறுப்பினரும், பார்வையற்றோரின் கல்வி வளர்ச்சிக்காக எமது நிறுவனத்தின் அங்கமாக கல்வி நிதியத்தை ஆரம்பித்து வைத்தவருமாகிய வேலுப்பிள்ளை கந்தசாமி அவர்கள் 01.09.2015 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2015) வெள்ளிக் கிழமை பி.ப 2.30 மணியளவில் கைதடியில் உள்ள யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் தொழிற்பூங்கா வளாகத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

**தகவல் :**
**யாழ் - விழிப்புலனற்றோர் சங்கம்,**
**இல.28,1-ம் ஒழுங்கை, கோவில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**0212227336, 0773741201**

(சி-2017)



### பாராளுமன்றத் தேர்தல் - 2015

**நன்றி பகிர்கின்றோம்.**

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் - உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு"
வள்ளுவப் பெருந்தகையின் வழி நின்று!

பாராளுமன்றத் தேர்தல் 2015, வன்னி தேர்தல் மாவட்டம். முல்லைத்தீவு நிர்வாக மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி சார்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பில் போட்டியிட்டபோது எனக்கு ஆதரவாக களத்தில் பரப்புரை செய்த சேவையாளர்களுக்கும், முல்லை நிர்வாக மாவட்டத்தில் அமோக வெற்றியீட்ட உங்கள் பொன்னான கரங்களைப் பதித்த முல்லை மாவட்ட மக்களுக்கும், வன்னி தேர்தல் தொகுதியில் கணிசமான வாக்குகளைப்பெற உங்கள் பொன்னான கரங்களைப் பதித்த வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட மக்களுக்கும், தேசியப்பட்டியலில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாக்கிய கட்சியின் தலைவர்களுக்கும் சிரம் தாழ்த்தி என் இதயபூர்வமான நன்றிகளை வெளிப்படுத்துகின்றேன்.

தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் நான் உங்கள் முன் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவேன்.

"நேர்மை வெல்லும்"

மக்கள் சேவையில்
**சாந்தி ஸ்ரீஸ்காந்தராசா,**
**பாராளுமன்ற உறுப்பினர்,**
**முல்லைத்தீவு மாவட்டம்,**
**மல்லாவி.**
(1673)

## வெடிகுண்டு மீட்பு

(கரணவாய்)

பருத்தித்துறை தும்பளை பன்னங்கட்டைப் பகுதியிலிருந்து வெடிகுண்டு ஒன்று நேற்று மாலை 3.30 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தின் வீடு ஒன்றில் நீர் குழாய் பொருத்துவதற்காக கிடங்கு வெட்டப்பட்ட வேளை மர்மப் பொருள் ஒன்று தென்பட்டதையடுத்து வீட்டு உரிமையாளரால் பருத்தித்துறை பொலிஸாருக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

அங்கு விரைந்த பொலிஸார் மேற்கொண்ட ஆய்வின் போது ஜி-36 ரக வெடிகுண்டு என இனங்காணப்பட்டது.

மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாத் தீவிரவாதங்களையும் முறியடித்த ஒரே நாடு இலங்கை

## மேஜர் ஜெனரல் உதய பெரேரா பாராட்டு

**எல்லா வகையான தீவிரவாதங்களையும் முறியடித்த அனுபவத்தைக் கொண்ட ஒரே நாடாக இலங்கை விளங்குவதாக, யாழ் மாவட்ட முன்னாள் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இராணுவம் நடத்திய இரண்டு நாள் பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


பாதுகாப்பு மாநாட்டின் இரண்டாவது நாளான நேற்று முன் தினம் உரை யாற்றிய மேஜர் ஜெனரல் உதய பெரேரா,

"கடந்த நூற்றாண்டில் தீவிர வாதம் தனது பழைய முகங் களை மாற்றியுள்ளது.

தீவிரவாதத்தின் ஐந்தாவது அலையைத் தடுத்து நிறுத்த, அனைத்துலக சமூகம் ஒன்றுபட வேண்டும். தீவிரவாதம் அடுத்ததாக, நாகரீகங்களின் மோதலாக உருவெடுக்கும் ஆபத்து உள்ளது.

தீவிரவாதம், பல்வேறு அலை களாக மாறியிருக்கிறது. முன்னர் குடியேற்றவாதம், மாக்சிசம் பின்னர், இனத்துவம், பிராந்திய வாதம் என்று அது வேறுபட்ட முகங்களைக கொண்டதாக மாறியிருக்கிறது.

இப்போது நாம் நாகரீகங்களின் மோதல்களை காண்கிறோம்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)






பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் இரண்டு மாடிக் கட்டடம் நேற்று வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டது. வடமாகாண சபையின் கீழ் அமைக்கப்பட்ட இக்கட்டடத்தினை வடமாகாண சுகாதார அமைச்சர். ப. சத்தியலிங்கம் திறந்து வைத்தார்.

# பழைய கடவுச்சீட்டை தொடர்ந்தும் பயன்படுத்துவதற்கு அனுமதியுண்டு

புதிய கடவுச்சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதிலும் பழைய கடவுச்சீட்டை தொடர்ந்தும் பயன்படுத்த முடியும் என குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கை விரல் அடையாளம் மற்றும் டிஜிடல் புகைப்படத்தின் ஊடாக தயாரிக்கப்பட்டுள்ள புதிய கடவூச் சீட்டு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளார் நாயகம் எம்.என் ரணசிங்க தெரிவித்தார்.

ஒரே நாளில் கடவுச்சீட்டினை பெற்றுக் கொள்வதற்கு 3500 ரூபாவும் சாதாரண முறையில் பெற்றுக்கொள்ள 1500 ரூபாவும் பெற்றுக் கொள்வதாகவும் எம்.என் ரணசிங்க தெரிவித்துள்ளார் .

இதேவேளை வெளிநாட்டு கடவுச் சீட்டுகளை விநியோகிப்பதற்கான கருமபீடங்களை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய 16 கருமபீடங்கள் தற்போது 32 கருமபீடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ள தாகவும் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளார் நாயகம் எம்.என் ரணசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# அனர்த்த நிலைமைகளின் போதே தேசிய அரசாங்கம் தேவைப்படும்

## பெத்தேகம சமித தேரர் கூறுகிறார்

தேசிய அனர்த்த நிலைமைகளின் போதே தேசிய அரசாங்கமொன்று தேவைப்படும் என தென மாகாணசபை உறுப்பினர் பெத் தேகம சமித தேரர் தெரிவித்துள் ளார்.

நாட்டில் தேசிய அனர்த்த நிலை மைகள் எதுவும் கிடையாது, இரணடாம் உலகப் போரின்போது பிரிட்டனில் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டது.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் தற்போது நாட்டில் எதற்காக தேசிய அரசாங் கம் அமைக்கப்படுகின்றது?

ரணில் விக்கிரசிங்கவின் சிறுபான்மை அரசாங்கத்தினால் ஆட்சி அமைக்க முடியாது.

மைத்திரிபால சிறிசேன இரண்டாவது தடவையாகவும் காட்டிக் கொடுப்பைச் செய்துள்ளார்.

ஹிட்லரைப் போன்று தமது கட்சி உறுப்பினர்களை அச்சுறுத்தி அவர்களை யானையின் வாலைப் பிடிக்கச் செய்ய மைத்திரிபால சிறிசேன முயற்சிக்கின்றார்.

மேற்குலக நாடுகளுக்கு அடிமை யான ஓர் அரசாங்கத்தை ரணில் உருவாக்க ஜனாதிபதி ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார் என பூசாவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். (இ-7)

# பதுளையில் 70 அடி பள்ளத்தில் ஆட்டோ பாய்ந்து விபத்து

## 5 பேர் படுகாயம்

பதுளை மாவட்டத்தில் வெலிமடை பதுளை பிரதான வீதியில், ஹாலிஎல நகரத்துக்கு அண்மையில் நேற்று முன் தினம் மாலை ஆட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி 70 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில், 2 குழந்தைகள் உட்பட 3 பேர் படுகாயமடைந்த நிலையில் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் ஆட்டோ சாரதியின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சாரதியின் கவனயீனம் காரணமாக விபத்து நேர்ந்துள்ளதாகவும், இவ்விபத்து இடம்பெறும்போது குறித்த ஆட்டோவில் 5 பேர் பயணித்துள்ளனர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் பதுளை பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# சூழலியல் விவசாயக் கண்காட்சி நல்லூரில் ஆரம்பம்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு வடக்கு மாகாண விவசாய அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள' சூழலியல் விவசாயத்தை நோக்கி' என்னும் விவசாயக் கண்காட்சி நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

நல்லூர் ஆலயத்தின் பின்வீதியில் அமைந்துள்ள மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தில் இக்கண்காட்சியை வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் தொடக்கி வைத்துள்ளார்.

உடல்நலத்துக்கும், சுற்றுச்சூழலுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்ற விவசாயச் செயன்முறைகளைத் தவிர்த்து உடல் ஆரோக்கியத்துக்கும் சுற்றுச்சூழலுக்கும் நன்மைகளை விளைவிக்கக் கூடிய முறைகளை விவசாயத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கோடு காட்சிக்கூடங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

நிலத்தடி நீர்வளம் மாசுறும் விதம், நிலத்தடி நீர்வளத்தைப் பாதுகாக்கும் முறைகள், அசேதன உரங்களுக்கு மாற்றீடான இயற்கைப் பசளைகள், இரசாயனப் பூச்சி கொல்லிகளுக்கு மாற்றீடான இயற்கைப் பூச்சிகொல்லிகள், நவீன விவசாய இயந்திரங்கள், சேதனமுறையில் வளர்க்கப்பட்ட பயிர்கள், நல்லினக் கால்நடைகள் போன்றவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளதோடு, பார்வையாளர்களுக்கு இது தொடர்பாக பூரணமான விளக்கமும் வழங்கப்பட்டு வருகிறது.

காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருட்களினதும் வழங்கப்படும் விளக்கங்களினதும் அடிப்படையில் பார்வையாளர்களிடையே போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மூன்று வினாக்களுக்குச் சரியான பதிலை வழங்குபவர்களுக்கு நல்லின மரக்கன்றுகள் பரிசுகளாக வழங்கப்படுகிறது.

இக்கண்காட்சியின் தொடக்க நிகழ்ச்சியில் வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், கல்வி அமைச்சர் த.குருகுலராசா, எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, மாகாண சபை உறுப்பினர்கள் ச.சுகிர்தன், வே.சிவயோகன், பிரதம செயலாளர் அ.பத்திநாதன், விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், மாகாண கால்நடை அபிவிருத்தி உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் சி.வசீகரன்,



மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி சோ.சண்முகானந்தன் மற்றும் திணைக்களப் பிரதிப்பணிப்பாளர்கள் உட்பட ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தார்கள்.

இக்கண்காட்சி பூங்காவனத் திருவிழா வரை நடைபெறும் எனவும் தினமும் பிற்பகல் 2.00 மணி தொடங்கி இரவு 8.00 மணிவரையும் தேர் மற்றும் தீர்த்தத் திருவிழா நாட்களில் காலை 9.00 மணியில் இருந்து இரவு 8.00 மணிவரையும் நடைபெறும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புள்ளி மயிலோனே முருகா சரணம்

# பொபி பத்திகள்



பக்தனுக்கும் பகவானுக்கும்
பாதமாய் அமைவது பொபி பத்திகள்




பொபி B-20 பத்திகள்
1 பெக்கட்டில் 3 வாசனை

70/=



பொபி ரோஜா மணத்தில்
100 பத்திகள்

100/=




பொபி மல்லிகை மணத்தில்
50 பத்திகள்

50/=




பொபி பிலெட்டினம் பத்திகள்

20/=





பொபி குரு பத்திகள்

30/=

**BOBBY OVER SEAS**
177,balagolla kengalla.
Tel : 081 3836647

36 வருட தேசிய அபிவிருத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இலங்கையின் 149 ஆவது பொலிஸ் தினம் கிளிநொச்சியிலும் பிரதான பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையில் நேற்றுக் காலை 8 மணியளவில் நடைபெற்றது. இதில் கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார். இந்த நிகழ்வில் உயிர்நீத்த பொலிஸாருக்கு வணக்கம் செலுத்தப்பட்டுள்ளதுடன் நினைவாக மரங்களும் நாட்டி வைக்கப்பட்டுள்ளன.

# வெள்ளவத்தை-யாழ்ப்பாணம் இ.போ.ச.பேருந்துச் சேவை

வெள்ளவத்தையில் இருந்து யாழ்ப்பாணம் செல்லுகின்ற பயணிகளின் நலன் கருதியும் நல்லூர் உற்சவத்திற்கு கலந்து கொள்ளும் பக்தர்களின் நலன் கருதியும் யாழ்.சாலையும் காரை நகர் சாலையும் இணைந்து தின மும் இரவு 8.30 மணிக்கு வெள்ளவத்தை புகையிரத நிலையத்திலிருந்து வெள்ளவத்தை யாழ் ப்பாணத்திற்கான பேருந்து சேவை நேற்று முன்தினம் 2ஆம் திகதி தொடக் கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பேருந்து தின மும் யாழ்.மத்திய பேருந்து நிலையத்திலி ருந்து தினமும் இரவு 10மணிக்கு கொழும்பு-வெள்ள வத்தை நோக்கி புறப்படும் என இலங்கை போக் குவரத்துச் சபையின் வடமாகாண சாலை முகாமையாளரால் அறிவிக்கப்ப ட்டுள்ளது. (இ-7)


**டயானா பிளாஸ்ரிக் மீள் சுழற்சி**

சகல விதமான உடைந்த பிளாஸ்ரிக் போன்றவை உத்தரவாதத்துடன் ஒட்டிக் கொடுக்கப்படும்.

✱ பழைய பிளாஸ்ரிக் விலைக்கு வாங்கப்படும்.

108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P 077 5925088, 021 222 8680







## இசை அர்ச்சனை

(யாழ்ப்பாணம்) நல்லூர் கந்தனின் கார்த்திகை திருவிழாவின் மாலைத் திருவிழாவில் சுவாமி வீதி வலம் வந்ததும் உள்வீதியில் எண் திசைகளிலும் இன்று மாலை இசை அர்ச்சனை இடம்பெறவுள்ளது.

வழமை போன்று நடைபெறும் இவ் இசை அர்ச்சனை நிகழ்வில் பலகலைஞர்கள் பங்குமபற்ற வுள்ளனர். (இ-3)


**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1968 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 26<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: மனைவி இறப்பு, விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/4907 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 27<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: சித்தவைத்தியர்<br>தொ.இ: G/4914 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 11 உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSC/ ஆசிரியர்<br>தொ.இ: B/4908 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 28<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BSC<br>தொ.இ: G/4915 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 24 உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4909 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 32<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Diploma/ தாதி<br>தொ.இ: G/4921 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 3 3/4 உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: EEE/ பொறியியலாளர்<br>தொ.இ: B/4910 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 26 செவ் 2 இல்<br>உயரம்: 164cm<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/4925 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


## ராசி பலன்

04.09.2015
(ஆவணி 18, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03. மணிக்கு
சஷ்டி முற்பகல் 11.38 மணிவரை
பரணி முற்பகல் 7.47 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
கார்த்திகை விரதம், கீழ் நோக்கு நாள்
வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | சந் | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சித்திரை<br>பகல் 1.25 இற்கு<br>இடப-சந் | | செவ்<br>சுக |
| | | | குரு<br>சுக் |
| | | சனி | புதன்<br>ராகு |

**மீனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த சில நல்ல திருப்பங்களைக் காணலாம்.

**மேடம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** பெருமைகள் வந்து சேர கந்தனை வழிபட வேண்டிய நாள், உடல் நலம் சீராக உணவில் கட்டுப்பாடு தேவை, உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்** எடுத்த காரியத்தை முடிக்க ஒரு முறைக்கு இருமுறை அலைய நேரிடலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சயனசுகக்குறைவான நாள்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், நல்ல தகவல்கள் வந்து சேரும் நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மகரம்** எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்.

**சிம்மம்** சந்தோசமான சம்பவங்கள் இடம்பெறலாம், பணியில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**தனுசு** வியாபார விரோதம் விலகும், கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வருங்கால நலன்கருதி எடுத்த புது முயற்சிகள் வெற்றி தரும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உடன்பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர்.


**துலாம்** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், மறதியால் ஒரு சில பணிகளை செய்யாமல் தவற விடலாம், சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது.

**கன்னி** அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சில குறைகள்



**வே**லூர் அரசுப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த பிரதாப், இப்போது கடலூரிலுள்ள ஒரு அரசுப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தான்.

அவனுடைய தந்தையாருக்கு கடலூரில் பணிமாற்றம் செய்யப்பட்டதால், அவனும் கடலூருக்கு வர வேண்டியதாயிற்று.

அவனுடைய தாயார் பிரதாப்பிடம், "மகனே, நல்ல நண்பனிடம் சேர்" என்றாள்.

அவனும் தன் தாய் சொல்லை அப்படியே ஏற்றான்.

அவன் ஆறாம் வகுப்பு படித்தான். அவனுடன் படித்த அபிஷேக் என்பவனை அவன் நண்பனாகப் பெற்றான். இருவரும் இணை பிரியா நண்பர்களாக இருந்தனர்.

வகுப்பில் கூட பிரதாப் அருகில் தான் அபிஷேக் அமர்ந்திருப்பான். உணவு வேளையில் இருவரும் ஒன்றாக அமர்ந்து, ஒருவர் கொண்டு வந்திருக்கும் உணவை இன்னொருவர் மாற்றி உண்டனர். பள்ளி விட்டு வீட்டுக்குச் செல்லும் போதும், இருவரும் ஒன்றாகத் தான் செல்வர்.

ஒருவன் பள்ளிக்கு வரவில்லையென்றால் இன்னொருவனும் வரமாட்டான். இப்படி பிரதாப், அபிஷேக் இருவரும் நகமும், சதையும் போல இணைந்தே இருந்தனர்.

தன்னைப் போன்றே நல்ல பழக்கங்கள் கொண்ட அபிஷேக் தனக்கு நண்பனாகக் கிடைத்ததை எண்ணி பிரதாப் பெரிதும் மகிழ்ந்தான். அவனைப் பற்றித் தன் பெற்றோரிடம் பெருமையாகக் கூறினான்.

"அபிஷேக்கைப் போல் எனக்கு ஒரு நண்பன் இருந்து விட்டால்போதும், எனக்கு வாழ்க்கையில் வேறு எதுவும் வேண்டாம்" என்று அவனை வானளாவப் புகழ்ந்தான் பிரதாப்.

நல்லபழக்கங்களைக் கொண்டிருந்த அபிஷேக்கிடம் துரதிருஷ்டவசமாக சில தீய பழக்கங்கள் ஒட்டிக் கொண்டன.

ஒருநாள் வகுப்பில் தன் அருகில் அமர்ந்திருந்த மாணவனின் பேனாவை அவனுக்குத் தெரியாமல் எடுத்தான் அபிஷேக். அதை பிரதாப் பார்த்து விட்டான்.

அவனை தனிமையில் அழைத்து, "அபிஷேக், திருடுவது மிகவும் கெட்ட பழக்கம். உனருகில் அமர்ந்திருந்த மாணவன் ஒருவனுடைய பேனாவைத் நீ எடுத்ததை நான் பார்த்தேன். அதை அவனிடம் திருப்பிக் கொடுத்து விடு," என்றான்.

"பிரதாப், இதெல்லாம் எனக்கு சகஜம். அதை நான் திருப்பித் தரமாட்டேன்," என்றான்.

பிரதாப் அமைதியாக இருந்து விட்டான்.

இன்னொரு நாள் அபிஷேக் தன்மேல்தவறை வைத்துக்கொண்டு, இன்னொரு மாணவனை அடித்து விட்டான். அதையும் பிரதாப் பார்த்து விட்டு தட்டிக்கேட்டான்.

"யாரையாவது அடிக்கவில்லையென்றால் எனக்குத் தூக்கமே வராதுடா," என்று பிரதாபிடம் கூறி விட்டான் அபிஷேக்.

நாளடைவில் அபிஷேக் மேல் பிரதாப்புக்கு வெறுப்பு தோன்ற ஆரம்பித்துவிட்டது. அதனால் அவனிடம் சேர்வதை பிரதாப் நிறுத்திக் கொண்டான்.

தன் பெற்றோரிடம், "அபிஷேக்கைப் போன்று ஒரு தீய நண்பன் உலகில் வேறு யாருமே இல்லை. எனவே, அவன் இனி எனக்கு நண்பன் இல்லை," என்று கூறினான்.

"பிரதாப், ஒருநாள் உன் நண்பனைப் பற்றி என்னிடம் வானளவு புகழ்ந்தாய். இன்று ஏன் அவனைத் திட்டுகிறாய்?" என்று கேட்டாள் அம்மா.

"அம்மா அப்போது அவன் நல்ல பழக்கங்கள் உடையவனாகத் தான் இருந்தான். இவன் இப்படியே நல்லவனாக இருப்பான் என்றுதான் அவனோடு நான் நட்பு கொணடேன். ஆனால், இன்றோ அவன் இன்னொருவனுடைய பேனாவைத் திருடுகிறான்.

தவறு தன்மேல் இருந்தும், அப்பாவியான இன்னொருவனை அடிக்கிறான். அதனால் அவனிடமிருந்து நான் பிரிந்துவிட்டேன். இனி அவன் எனக்கு நண்பன் இல்லை. இனி அவன் யாரோ? நான் யாரோ?" என்று பொரிந்து தள்ளினான்.

"நீ மனமுவந்துதான் அவனை நண்பனாக ஏற்றுக்கொண்டாய். அவன் அப்போது நல்ல பழக்கங்கள் உடையவனாக இருந்தான். பிறகு ஒரு சில குறைகள் அவனிடம் தோன்றியிருக்கின்றன. அதனால் நீ அவனுடன் விரோதம் கொண்டு அவனைப் பிரியக்கூடாது. அவனுடைய சிறிய குறைகளை நீ பொறுத்துக் கொள்ளத்தான் வேணடும். அவன் குறைகளை அன்பாக எடுத்துக் கூறு. அவன் திருந்தி விடுவான்," என்றாள் பிரதாப்பின் தாயார்.

தன் தவறை உணர்ந்தான் பிரதாப். மறுநாள் பிரதாப் வகுப்புக்குச் சென்று, அபிஷேக்கைச் சந்தித்து அன்பாக அறிவுரை கூறினான்.

அவனும் தன் குறைகளைத் திருத்திக் கொண்டான். இருவரும் பழையபடியே இணை பிரியா நண்பர்களாயினர்.

குட்டீஸ் உங்கள் நண்பர்களிடமும் ஒரு சில் குறைகள் இருந்தால், அவர்களுக்கு, அன்பாக அறிவுரை கூறுங்கள். அவர்களும் திருத்திக் கொள்வர்.

## 09.2015 04 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 476 - கடைசி ரோமப் பேரரசன் ரொமூலஸ் ஆகுஸ்டஸ் முடிதுறந்தான்.
- 1666 - லண்டன் மாநகரில் மூன்று நாட்களாக இடம்பெற்ற பெரும் தீ விபத்தில் 13,000 இற்கும் அதிகமான வீடுகள் அழிந்தன.
- 1781 - லாஸ் ஏஞ்சலஸ் நகரம் ஸ்பானிய ஆளுநரான ஃபிலிப்பே டி நெவெ என்பவரால் அமைக்கப்பட்டது.
- 1888 - தான் கண்டுபிடித்த படம்பிடிகருவிக்கு ஜார்ஜ் ஈஸ்ட்மன் கோடாக் என்பதை வர்த்தகக் குறியீடாக காப்புரிமை பெற்றுக் கொண்டார்.
- 1951 - கண்டங்களுக்கிடையேயான முதலாவது நேரடித் தொலைக்காட்சி ஜப்பானில் இடம்பெற்ற அமைதி மாநாட்டில் இருந்து இருந்து கலிபோர்னியாவின் சான் பிரான்சிஸ்கோ நகருக்கு ஒளிபரப்பப்பட்டது.
- 1956 - வன்தட்டு நினைவகத்தைக் கொண்ட உலகின் முதலாவது கணினியை ஐபிஎம் அறிமுகப்படுத்தியது.
- 1970 - சல்வடோர் அலெண்டே சிலி நாட்டின் அதிபரானார்.
- 1972 - ஐக்கிய அமெரிக்காவின் மார்க் ஸ்பிட்ஸ் ஜேர்மனியின் மியூனிக் நகரில் இடம்பெற்ற 1972 ஒலிம்பிக் போட்டிகளில் நீச்சலில் ஏழாவது தங்கப் பதக்கத்தைப் பெற்று சாதனை படைத்தார்.
- 1978 - அண்ணா பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 2006 - ஸ்ரேலின் டெல் அவீவ் நகரின் பாடசாலை ஒன்றின் அடியில் கிமு 1 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் ஒரு புதைகுழிக் குகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1824 - ஆன்டன் புரூக்னர், ஆஸ்திரிய இசையமைப்பாளர் (இ. 1896)
- 1825 - தாதாபாய் நௌரோஜி, இந்திய அரசியல்வாதி (இ. 1917)
- 1926 - ஐவன் ஈலிச், ஆஸ்திரிய மெய்யியலாளர் (இ. 2002)
- 1927 - ஜோன் மெக்கார்த்தி, அமெரிக்கக் கணினியியலாளர் (இ. 2011)
- 1941 - சுசில்குமார் சிண்டே, இந்திய அரசியல்வாதி
- 1962 - சின்யா யாமானாக்கா, சப்பானிய மருத்துவர், நோபல் பரிசு பெற்றவர்
- 1971 - லான்சு குளுசுனர், தென்னாப்பிரிக்கத் துடுப்பாட்ட வீரர்
- 1974 - நவீட் அஸ்ரப், பாக்கித்தான் துடுப்பாட்ட வீரர்
- 1981 - பியான்சே நோல்ஸ், அமெரிக்க நடிகை

### இறப்புகள்

- 422 - முதலாம் போனிஃபாஸ் (திருத்தந்தை)
- 1907 - எட்வர்டு கிரெய்கு, நார்வேயைச் சேர்ந்த இசையமைப்பாளர் (பி. 1843)
- 1987 - பில் போவ்ஸ், இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர் (பி. 1908)
- **2006, ஸ்டீவ் ஏர்வின், ஆஸ்திரேலிய இயற்கை ஆர்வலர், (பி 1962)**

## ஸ்டீவ் இர்வின்



ஸ்டீவ் இர்வின் ஓர் ஆஸ்திரேலிய இயற்கை ஆர்வலரும், வனவிலங்கு பராமரிப்பு விற்பன்னரும், புகழ் பெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி அமைப்பாளரும் ஆவார். முதலை வேட்டைக்காரர் என அழைக்கப்படும் இர்வின், தொலைக்காட்சியில் முதலையுடன் துணிவாக விளையாடி உலகம் முழுவதும் பரவலாக அறியப்பட்டவர். இவர் குயீன்ஸ்லாந்து மாநிலத்தில் உள்ள ஆஸ்திரேலிய விலங்குகள் காட்சிச்சாலையை எடுத்து நடத்தி வந்தவர்.

அவருக்கு இரு குழந்தைகளும் மனைவியும் உள்ளனர். அவருடைய மனைவியும் முதலைகளை பராமரிப்பவர். ஸ்டீவ் இர்வினுடைய தந்தையும் தாயும் கற்றுக்கொடுத்ததுதான் இந்த முதலை விளையாட்டும் பராமரிப்பும். எட்டு வயதிலேயே களத்தில் இறங்கியிருந்திருக்கிறார். 44 வயதில் இறந்த அவர் வெளியுலகுக்கு அறிமுகமானது அவருடைய நண்பர் 1990ல் எடுத்த நிகழ்படக் கோப்புகள் மூலமே.

கொட்டும் திருக்கை (ஸ்டிங்கிறே) என்னும் நீர்வாழ் விலங்கு. இதற்கு அட்டவண்ணைத் திருக்கை என்றும் பெயர் செப்டம்பர் 4, 2006 இல் தண்ணீரில் ஆபத்தான விலங்கினங்கள் பற்றிய ஒரு விளக்கப் படம் எடுக்கும்பொழுது பெருந்திருக்கை என்றும் அட்டவண்ணைத் திருக்கை என்றும் சொல்லப்படும் ஒரு கொட்டும் திருக்கை மீன் எனப்படும் ஒருவகை நீர்வாழ் இனத்தின் தாக்குதலுக்குள்ளாகி இறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை கரவெட்டி
## நெல்லியடி நவீன சந்தை புதிய கட்டடத்தொகுதியிலுள்ள கடைகள் வாடகைக்குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2015

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளினை உள்ளூராட்சித் திணைக்களத்தின் 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக ஒரே முறையில் செலுத்தக்கூடிய ஆகக் கூடிய கேள்வித் தொகையினை இச் சபைக்கு செலுத்துபவர்களுக்கு ஐப்பசி -2015 மாதம் தொடக்கம் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றது.

1. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி :- 23/09/2015 பி.ப.3.00மணி
2. கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி :- 25/09/2015 ந.ப 12.00மணி
3. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 25/09/2015 பி.ப. 2.00மணி
4. கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தபால் உறையானது அரக்கு முத்திரையிடப் படல் வேண்டும். இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் கடை இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு உரிய காலத்திற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது தலைமை அலுவல கத்திலுள்ள கேள்விப்பெட்டியில் இடுவதன் மூலமாகவோ சேர்க்கப்படல் வேண்டும்.
5. கேள்விப் படிவத்தினை தலைமை அலுவலகத்தில் தேசிய அடையாள அட்டையை காண்பித்து உரிய படிவக் கட்டணம், மீளளிக்கப்படும் வைப்புப் பணம் என்பவற்றைச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
6. எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு.
7. விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 05 வருடங்களுக்கு ஒரு முறை வாடகைப்பணம் மீளாய்வு செய்யப்படும். இம் மாற்றத்திற்கேற்ப வாடகைக் கட்டணம் மாற்றம் அடையும்.
8. அரச நிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச் சங்கங்களும் இக் கேள்வி நடைமுறைக் கமைவாக விண்ணப்பிக்கலாம்.
9. ஏற்றுக்கொள்ளப்படும் சித்திகரக் கேள்விக்காரர் தமது கேள்வித் தொகைக்கு மேலதிகமாக 11 சதவீதம் பெறுமதி சேர்வரியாகவும் (VAT) 02 சதவீதம் தேசத்தை கட்டியெழுப்புதல் வரியாகவும் (NBT) வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.
10. ம்தாந்த வாடகைப் பணத்தை அடுத்து வரும் மாதம் 10 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்து தல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10 சதவீதம் தண்டப்பணமாக செலுத்துதல் வேண் டும். தொடர்ந்து இரு மாதங்களிற்கு வாடகைப் பணங்களைச் செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் மறு அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
11. கடந்த காலங்களில் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்பட்டோர் அல்லது. இச் சபைக்கு குத்தகையாக, வாடகையாக , வரியாக நிலுவையில் உள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்றவராவார்.
12. குத்தகைக்கு பெற்ற கடையின் மின்சார இணைப்புக் கட்டணங்கள் மாதாந்தக் கட்டணங்கள் யாவும் குத்த கையாளரின் பொறுப்பில் அமையும்.

மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### கேள்வி அட்டவணை

| தொ.இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBT வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணம் (VAT,NBT வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (VAT,NBT வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| Ground Floor | | | | | |
| 1 | GF1 | 1,020,000.00 | 10,200.00 | 1,000.00 | 4250.00 |
| 2 | GF2 | 1,020,000.00 | 10,200.00 | 1,000.00 | 4250.00 |
| 3 | GF3 | 1,020,000.00 | 10,200.00 | 1,000.00 | 4250.00 |
| 4 | GF4 | 1,020,000.00 | 10,200.00 | 1,000.00 | 4250.00 |
| 5 | GF5 | 1,320,000.00 | 13,200.00 | 1,000.00 | 5500.00 |
| 6 | GF6 | 1,320,000.00 | 13,200.00 | 1,000.00 | 5500.00 |
| 7 | GF7 | 1,320,000.00 | 13,200.00 | 1,000.00 | 5500.00 |
| 8 | GF8 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 | 3750.00 |
| 9 | GF9 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 | 3750.00 |
| 10 | GF10 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 | 3750.00 |
| 11 | GF11 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 | 3750.00 |
| 12 | GF12 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 | 3750.00 |
| 13 | GF13 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 | 3750.00 |
| 14 | GF14 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 | 3750.00 |
| UPPER FLOOR | | | | | |
| 15 | UF15 | 1,020,000.00 | 10,200.00 | 1,000.00 | 4250.00 |
| 16 | UF16 | 1,020,000.00 | 10,200.00 | 1,000.00 | 4250.00 |
| 17 | UF17 | 1,020,000.00 | 10,200.00 | 1,000.00 | 4250.00 |
| 18 | UF18 | 780,000.00 | 7,800.00 | 1,000.00 | 3250.00 |
| 19 | UF19 | 780,000.00 | 7,800.00 | 1,000.00 | 3250.00 |
| 20 | UF20 | 780,000.00 | 7,800.00 | 1,000.00 | 3250.00 |
| 21 | UF21 | 780,000.00 | 7,800.00 | 1,000.00 | 3250.00 |
| 22 | UF22 | 720,000.00 | 7,200.00 | 1,000.00 | 3000.00 |
| 23 | UF23 | 480,000.00 | 4,800.00 | 1,000.00 | 2000.00 |
| 24 | UF24 | 480,000.00 | 4,800.00 | 1,000.00 | 2000.00 |
| 25 | UF25 | 720,000.00 | 7,200.00 | 1,000.00 | 3000.00 |
| 26 | UF26 | 720,000.00 | 7,200.00 | 1,000.00 | 3000.00 |
| 27 | UF27 | 720,000.00 | 7,200.00 | 1,000.00 | 3000.00 |

க.கனகதுரை,
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
03.09.2015.

(சி-2014)

# மக்கள் ஊழல்வாதிகளுக்கே அங்கீகாரம் வழங்கியுள்ளனர்

**உணர்ச்சி பூர்வமாக உரையாற்றிய மாயாதுன்ன**

(கொழும்பு)

**மக்கள் ஊழல் எதிர்ப்பாளர்களுக்கு அங்கீகாரம் வழங்கவில்லை ஊழல்வாதிகளுக்கே அங்கீகாரம் வழங்கியிருப்பதால் எனது பதவியை இராஜினாமா செய்யத் தீர்மானித்தேன். மேலும் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யுமாறு மக்கள் விடுதலை முன்னணியினால் தனக்கு எந்த அழுத்தங்களும் கொடுக்கப்படவில்லை என முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் எஸ்.மாயாதுன்ன தெரிவித்துள்ளார்.**



தன்மீது நம்பிக்கை வைத்து தன்னால். முன்னெடுக்கப்பட்ட ஊழல் எதிர்ப்பு போராட்டத்தை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வர கட்சிக்குள் வெளியில் இருந்த தனக்கு அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியமைக்கு மக்கள் விடுதலை முன்னணிக்கு நன்றி தெரிவித்து கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று தான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்வதற்கான காரணங்களை விளக்கி உரையாற்றும் போதே மாயாதுன்ன இதனை தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி என்னை தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்குமாறு வலியுறுத்திவருகிறது.

எனினும் ஊழல் இல்லாத நாட்டை காண்பது எனது அபிலாஷை . ஊழலுக்கு எதிராக தொடர்ந்தும் குரல் கொடுத்த கட்சி என்ற வகையில் மக்கள் விடுதலை முன்னணி எதிர்பார்த்தது போல, கடந்த தேர்தலில் அந்த கொள்கைக்கு மக்கள் அங்கீகாரத்தை வழங்கவில்லை.

இதனால், தேசியப்பட்டியலில் பெயரிடப்பட்ட என்னை போன்ற படித்த புத்திசாலிகளை மக்கள் நிராகரித்துள்ளனர். இதனால், மக்களின் நிலைப்பாட்டுக்கு தலைவணங்கி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ய தீர்மானித்தேன்.

அரச சேவையை அரசியல் மயப்படுத்தலில் இருந்து விடுவிக்கவும் அரச சேவையை பாதுகாக்கவும் பல அர்ப்பணிப்புக்களை செய்த மக்கள் விடுதலை முன்னணிக்கு அரச ஊழியர்களின் வாக்குகளான தபால்மூல வாக்களிப்பிலும் அங்கீகாரம் வழங்கப்படவில்லை. 7.5 வீத தபால் மூல வாக்குகளையே மகக்ள் விடுதலை முனணிபெற்றது.

இதனால், மக்கள ஊழல் எதிர்ப்பாளர்களுக்கு அங்கீகாரம் வழங்கவில்லை. ஊழல்வாதிகளுக்கே அங்கீகாரம் வழங்கியிருப்பதால், மிகவும் ஜனநாயக ரீதியில் மக்களின் நிலைபாட்டுக்கு தலை வணங்கி நான் பதவியை ராஜினாமாசெய்கிறேன எனவும்மாயாதுன்னமேலும் தெரிவித்தார். (இ-7)


சுகாதார, சுதேச மருத்துவ சமூக சேவைகளும் புனர்வாழ்வும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சு- வடமாகாணம்

**குறுந்திரைப்படப் போட்டி-2015**

வடமாகாணத்தில் சிறுவர் மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய குறுந்திரைப்படங்களை தயாரிப்பதற்கான போட்டிக்கு ஆர்வமுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேர்ந்தெடுக்கப்படும் தரமான படைப்புகளுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் மேலதிக விபரங்களை,

- அலுவலக நேரங்களில் 021 222 0804 இலக்கத்தில் உதவிச் செயலாளரைத் தொடர்பு கொள்வதன்மூலமும்
- அலுவலக நாட்களில் அமைச்சு அலுவலகத்தில் நேரடியாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

செயலாளர்
சுகாதார, சுதேச மருத்துவ, சமூக சேவைகளும் புனர்வாழ்வும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சு, வ.மா,
சுகாதாரக் கிராமம்,
பண்ணை,
யாழ்ப்பாணம் (சி-2013)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிப்புணர்வு நாடக எழுத்துரு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

சிறுவர் மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் குறுந்திரைப்படங்கள் தயாரித்தல் தொடர்பான போட்டிகளுக்கான எழுத்துரு ஆக்கங்கள் ஆர்வமுள்ளவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

வடக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ, சமூக சேவைகளும் புனர்வாழ்வும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் ஊடாகவே போட்டிகளுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

தற்பொழுது சிறுவர் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் நாளாந்த பரவலான செய்திகள் அதிகரித்த வண்ணமேயுள்ளது.

இந்நிலையைத் தவிர்ப்பதற்கு சமூகத்தின் ஒவ்வொரு பிரஜை வரையிலும் விழிப்புணர்வைக் கொண்டு சேர்ப்பதற்கான ஆக்கபூர்வமான பொறிமுறையாக உயிரோட்டமான குறுந்திரைப்படங்களினைத் தயாரித்து மக்களை எளிதில் சென்று சேரக்கூடியவாறு அல்லது தாக்கத்தினை உண்டுபண்ணக்கூடியவாறு தங்களால் தயாரிக்கப்படவுள்ள குறுந்திரைப்படங்கள் இருக்க வேண்டும்.

இதற்கமைய பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான சமூகப் பிரச்சினைகள், விதவைகள் தொடர்பான சமூகப் பார்வையும் மற்றும் பெண்களைத்தலைமைத்துவமாகக்கொண்ட குடும்பங்கள் எதிர்நோக்கும் சவால்களும் எனும் விடயங்களை உள்ளடக்கியதான குறுந்திரைப்படங்களை தயாரிப்பதற்கான ஆர்வம் உள்ளவர்களிடம் இருந்து முதற்கட்டமாக சிறந்த கதையம்சங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

சிறந்த கதையம்சமுள்ள எழுத்தாக்கங்கள் போட்டித் தெரிவினடிப்படையில் தேர்வு செய்யப்படும்.

இவ் எழுத்தாக்கங்கள் எதிர்வரும் ஒரு மாத காலப்பகுதியினுள் அதாவதுஐப்பசிமாதம்2ஆம்திகதிமுன் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

மேலும் தெரிவு செய்யப்பட்ட சிறந்த எழுத்தாக்கத்திற்குரிய கலைஞர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்படும் என்பதுடன் அவர்கள் மீள அதனை குறுந்திரைப்படமாகத் தயாரித்து வைத்திருக்க வேண்டும்.

பின்னர் அறிவிக்கப்படும் கால அவகாசத்தினுள் வழங்க வேண்டும். சிறந்த குறுந்திரைப்படங்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும். இக் குறுந் திரைப்படங்கள் 10 நிமிடங்களுக்கு குறையாமலும் 15 நிமிடங்களுக்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும் என்பது மிக முக்கியமானதாகும்.

மேலதிக விபரங்களைப் பெற வடமாகாண சுகாதார அமைச்சின் உதவிச் செயலாளரை அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ள முடியும் எனவும் 021 222 0804 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-5)

# வர்த்தக ரீதியாக விவசாய அபிவிருத்தி யாழிலிருந்து 29 விவசாயிகள் தெரிவு

வர்த்தக ரீதியாக விவசாயத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் இந்த வருடம் யாழ். மாவட்டத்திலிருந்து 29 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டதாக யாழ். மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவித்துள்ளன.

விவசாய அமைச்சினால் ஒவ்வொரு மாவட்டத்திலும் வர்த்தக ரீதியான பயிர்ச் செய்கைகளை அதிகரிப்பதற்காக ஒவ்வொரு வருடமும் குறித்த தொகை விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பயிர்ச் செய்கைகளுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இச் செயற்றிட்டத்தின் கீழ் உள்வாங்கப்படும் விவசாயிகளுக்கு 5 வருடத்திற்கு சொந்தமாக அல்லது குத்தகைக்கு எடுத்துக் கொண்ட நிலம் இருக்க வேண் டும்.

அத்துடன் திராட்சை செய்கை மேற்கொள்ள விரும்புவோருக்கு 1/2 ஏக்கர் நிலமும் குரக்கன் பயிரிட விரும்புவோருக்கு 2ஏக்கர் நிலமும் மரக்கறி பயிரிடுபவருக்கு 2.5ஏக்கர் நிலமும் மாதுளை பயிரிடுபவருக்கு 2.5 ஏக்கர்நிலமும் இருக்க வேண்டும். இவர்களுக்கான விண்ணப்பப் படிவங்களை ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

இச் செயற்றிட்டத்திற்கு விண்ணப் பித்திருந்தவர்கள் நேர்முகப் பரீட்சை மற்றும் களவிஜயம் மேற்கொள்ளப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் தெரிவு செய்யப்படுவார்கள்.

ஒரு விவசாயிக்கு 5 இலட்சம் ரூபாய் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 50 வீதம் மானிய அடிப்படையில் பயிர்ச் செய்கைக்கான உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

யாழ்.மாவட்டத்தில் இத்திட்டத்திற்கென இந்த வருடம் 4.458 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் நடைமுறைப படுத்தப்பட்டு வருவ தாக தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (இ-9)

## மஹாகும்பாபிஷேகம்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் வடக்கு அருள்மிகு வள்ளி தெய்வானை உடனுறை முருகையா தேவஸ்தானத்தின் மஹாகும்பிஷேக பெருஞ்சாந்தி விழா நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை மஹா கும்பிஷேக பெருவிழா நடைபெற்று முடிவுறவுள்ளது.

கும்பாபிஷேக பிரதம குருவாக சிவஸ்ரீ .மு. பாஸ்கர ரவிக்குருக்கள் கலந்து கொள்கின்றார். (இ-5-60)




## மனிதனாக வாழ்வோம்

இன்று வெள்ளிக்கிழமை நல்லூர் அதிகம் பீர ஸர்வர்ண கலாபன நூதன நவதள குபேர இராஜகோபுர கும்பாபிஷேகம் (நவகலசாபிஷேகம்) மற்றும் கார்த்திகைத் திருவிழாவினை முன்னிட்டு நல்லூர் ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில்நடைபெறும்யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் 'மனிதனாக வாழ்வோம்' கண்காட்சி காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறவுள்ளது. (இ-7)

# யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரி 3 ஆம் தவணைக்காக ஆரம்பம்

யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரியில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் 2015.09.08-2015.09.14 வரையான காலப் பகுதியினுள் நடத்தப்படவுள்ளமையினால் பாடசாலை 3 ஆம் தவணைக்காக 2015.09.15 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும்.

இதேவேளை கல்லூரியின் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் கூட்டம் எதிர்வரும் 2015.09.08 செவ்வாய்க்கிழமை காலை9 மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.

இதில் சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (இ



இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 149ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு பொலிஸ் தின விழா அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதற்கமைய நேற்றைய தினம் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் தின விழா கொண்டாடப்பட்டதுடன் பயன்தரு மரக்கன்றுகளும் பொலிஸாரினால் நாட்டப்பட்டன. (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

# கோவா பயிர்ச் செய்கையால் யாழில் வருமானம் அதிகரிப்பு

யாழ்.மாவட்டத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டினை விட 2015ஆம் ஆண்டுஅதிகவருமானங்கள்கொண்ட விவசாய பயிராக கோவா பயிர் செய்கை காணப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.கடந்த 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து 2010 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை 495.5 ஹெக்டயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட இப்பயிர்ச்செய்கை 150.03 மெற்றிக்தொன் உற்பத்திகள் யாழ்.மாவட்டத்தில் கிடைத்துள் ளதாக யாழ்.மாவட்ட விவசாய புள்ளிவிபரத்தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

அவற்றில் அடிப்படையில் படிப்படியாக அரசாங்கத்தினால் விவசாயிகளுக்கான சலுகை அடிப்படையிலான திட்டங்கள் மற்றும் மானியத் திட்டங்கள் என்பன முன்னெடுக்கப்பட்டுள்ளன.2013ஆம்ஆண்டுகாலப் பகுதியில் இருந்து 2014 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை இக் கோவாப் பயிர்ச்செய்கைவிவசாயிகள்பெருமளவுநிலப் பரப்பில் மேற் கொண்டதுடன் அவற்றின் உற்பத்திகளும் மெற்றிக்தொன்களும் அதிக ரித்து காணப்பட்டன.

அவற்றின் அடிப்படையில் கோப்பாய், அச்செழு,புன்னாலைக்கட்டுவன், ஈவினை, சுன்னாகம், மருதனார் மடம்,கரவெட்டி,உரும்பிராய், ஊரெழு, நிலாவரை ஆகிய பகுதிகளில் தற்போது சிறு ஏக்கர்களாக 1654.3 ஹெக்டயர் நிலப்பரப்பில் இக் கோவா உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாக விவசாய புள்ளிவிபரத்தரவுகள் தெரிவிக்கின்றன. அவற்றில் தற்போது அறுவடைகளும் மும்முரமாக இடம்பெற்று வருவதுடன் அவ் உற்பத்திகளை உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தைகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

கோவா உற்பத்தி செய்யும் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யும் வியாபாரிகள் ஒரு கிலோ கோவா 70 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுகின்றன என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அதன் அடிப்படையில்யாழ். மாவட்டத்தில் உள்ளூர் சந்தையின் நிலைவரம் படி ஒரு கிலோ கோவா 90 ரூபா வில் இருந்து 80 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (இ-7)

## மாட்டுடன் ஒருவர் நெல்லியடியில் கைது

(கரணவாய்)

சட்டவிரோதமாக மாடு ஒன்றினை இறைச்சிக்கு கொண்டு சென்ற நபர் ஒருவர் நெல்லியடிப் பொலிஸாரினால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கரவெட்டி ஞானசாரியார் பகுதியில் நேற்று அதிகாலை 5மணியளவில் நெல்லியடிப் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போதே மாட்டைக் கொண்டு சென்ற குறித்த நபர் பொலிஸாரினால் இடைமறிக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

மாடு கொண்டு செல்வதற்கான எவ்வித அத்தாட்சிப் பத்திரமும் அந்நபரிடம் இருக்கவில்லை.

இதனால் சந்தேகத்தின் பேரில் அந்நபர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டார்.

அத்துடன் இந்நபருக்கு மாட்டினைக் கொடுத்த நபரும் பொலிஸ் நிலையம் சென்றுள்ளதாகவும் இருவரிடமும் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரியவருகிறது. இ-5)

# அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களுக்கு தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றுவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கமைய யா/போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன்பாடசாலை, யா/சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கே மேற்படி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தரம்III இற்கான குறித்த வெற்றிடங்களுக்கு தகைமையுடைய விண்ணப்பதாரிகள் SLPS II,SLPS III, SLTS I,SLTS 2-I போன்ற தகைமைகளை கொண்டிருக்கவேண்டும்.

அத்துடன் விண்ணப்பதாரிகள் விண்ணப்பமுடிவுத்திகதியிலிருந்து ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் கடமையாற்றக்கூடிய வயதெல்லையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

இவ்விண்ணப்பங்கள் இலங்கை அதிபர் சேவை வகுப்பு அல்லது தரம் என்பவற்றில் வரிசைப்படி முன்னுரிமை அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

இலங்கை அதிபர் சேவையுச் சேர்ந்த பொருத்தமான விண்ணப்பங்கள் கிடைக்காத பட்சத்தில் ஆசிரியர் சேவையில் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படும்.

எனவே விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை வலயக்கல்வி அலுவலக நிர்வாகக் கிளையில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் அறிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதி கம்பீர ஸ்வர்ண கலாபன நூதன நவதள

ஸ்ரீ குபேர இராஜகோபுரம்

ஸ்ரீ ஷண்முகப்பெருமான் குபேர வாசல் தரிசனம்

நவகலசாபிஷேகம்

04.09.2015 வெள்ளிக்கிழமை, கார்த்திகை உற்சவதினம் - காலை 6 மணிமுதல்

Mega Sale

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு

மாபெரும் மலிவு விற்பனை

இன்று 04.09.2015 வெள்ளிக்கிழமை தொடக்கம் (5% தொடக்கம் 15 % வரை)

தம்ரோ, பியெஸ்ரா ஏக விநியோகஸ்தராகிய எங்களிடம்

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு Sofa செற்றிகளுடனும் 7500/= பெறுமதியான (Glass Coffee Table) மற்றும் Stand fan Free

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மெத்தைகளுடனும் ஒரு தலையணை (Pillow) இலவசம்

Innovex TV மற்றும் Preethi Mixi, Stand Fan, Rice Cookers Washing Machine ஐ அதிகூடிய விலைக் கழிவுடனும் Damro உத்தரவாதத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.

25000/= க்கு மேற்பட்ட பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்தால் இலவசமாக விநியோக சேவை (Home Delivery) செய்யப்படும்.

Damro, Piyestra Nilkamal, Phonix,Arpico ஆகிய பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்.







JAMUNA FURNITURE

181, Navalar Road, Jaffna

Tp. 021 222 1092, 077 757 4776


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூரானுக்கு இன்று கார்த்திகைத் திருவிழா



## கார்த்திகை கந்தனை பணிமனமே


கார்த்திகைத் திங்கள் கார்த்திகைத் திருநாள்
கந்தன் மகிழ்வுறு அவதாரம்
கதியெனக் கதறிடும் அடியவர்க்கெல்லாம்-கந்தன்
அருள் பொழிவதும் இன் நாளே
மங்கல நாத மந்திரம் ஒலிக்கும் நல்லை
சண்முகன் புகழ்பாடி
மாந்தர்களெல்லாம் கடலெனத் திரண்டு கந்தன் திருவடி
பணிந்திடும் திருநாளே
கார்த்திகைத் தீபம் கவலையைப் போக்கும் என்றும்
கார்த்திகைக் கந்தனை பணிமனமே

கலாபூஷணம் க.லோகேஸ்வரன்
தொல்புரத்தூர்.

## நல்லைக் கந்தன் நனிவிருத்தம்

கோரிக்கை கொடுத்துப் பக்தர்
குமுறியே அழுதால் வந்து
கோரி "கை"
கொடுத்துக் காக்கும்
குமரனே யுன்னைப் போல
வாரியே வழங்க வீந்த
வையத்தில் சக்தி யுண்டோ
ஆருயிர் அனைத்தும் நிற்கும்
அகிலமே நல்லைக் கந்தா

கலாபூஷணம்
சந்தக்கவிஞர்
நவ.பாலகோபால்



## சினம் தணிந்தவா

சரவணப் பொய்கையில் உதித்தவா
கார்த்திகைப் பெண்களின் மடியில் தவண்டவா
அன்னை அபிராமியின் அணைப்பில்
ஆறுமுகனாக அவதரித்தவா
சினம் தணிந்து தண்டாயுத பாணியாக
அமர்ந்தவா
உன் அருள் வேண்டி தாம் பணிகின்றேன்
வேலவா
உன் பொற்பதங்கள் சரணம் ஐயா..

வ.பவளகேசி, கொய்யாத்தோட்டம்.

## முருகா எம் பெருமானே...!

ஓவாது பலபிறவி
எடுத்தும் மாய்ந்தும்
ஊசலாடுவது அடியேன்
ஒழியும்வண்ணம்
மேவா என் மரநெஞ்சை
பலகை ஆக்கி
விதி எனும்
கயிறதனால்
அணைத்து
பூட்டி மூவாதே வாழ்
முன்னோனே
முருகா எம் பெருமானே...

மு.பாபுஜி

## அல்லாடி நிற்போரின் அருந்துணையே

அல்லாடி நிற்போரின் ஆறுதலே
அருந்துணையே வேல்முருகா
இல்லை என்று ஏங்குவோர்க்கு
இன்னல் நீக்கும் மால்மருகா
எல்லோரும் கைகூப்பி தொழுதோம்
எத்திசையும் புகழ் மணக்கும்
நல்லூரான் திருவடிக்கே
நலமான தமிழ் வணக்கம்.

சந்தியாபாலா, அல்லைப்பிட்டி

## ஞானப்பழம் நீ முருகா!

நல்லைப் பதியுறை முருகா!
நலம் தருவாய் உமை மைந்தா!
வேலினை கையினில் ஏந்திய வேலா!
வேண்டுகின்றோம் எம்மை காத்தருள் குமரா!
மாங்கனி ஒன்றுக்கு ஏங்கி நின்றாயே!
மாண்பான அண்ணனை வெறுத்து சென்றாயே!
பழனி மலைமீது ஏறி நின்றாயே!
ஞானப்பழம் என்ற பெயரைப் பெற்றாயே!

திருமதி.உ.பூமணி,
வடலியூர்.

## வடிவேல் முருகா வழிகாட்டு!

கந்தா உனக்கொரு விண்ணப்பம்
காசினி ஆளப் பதினாறைத்
தந்தாய் தமிழர் இடர்நீக்கித்
தடைகள் உடைக்க வழிகாட்டு
ஐந்தாண்டாகி அவர் மீண்டும்
அதையே சொல்லிப் பாராள
வந்தால் இனியும் முடியாது
வடிவேல் முருகா வழிகாட்டு!

கவிஞர்-
நயினை இராகுலன்

## வேலிருக்க அஞ்சாதே மடமை நெஞ்சே!

அருணகிரிக்கருள் செய்த ஐயன் எங்கள்
அரும்புலவன் நக்கீரன் பாடும் ஐயன்
பெரும்புகழை யாம் மண்ணும் பெற்றுக்கொள்ள
பிறந்தவனாம் நாவலனும் ஏற்றும் ஐயன்
அருந்தமிழால் யோகர் அவர் போற்றும் ஐயன்
அற்புதமாம் தமிழ்க் கடவுளான ஐயன்
வெறும் பிறவி நீக்கி எமை ஆண்டுகொள்வான்
வேலிருக்க அஞ்சாதே மடமை நெஞ்சே!

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

## காத்தருள்வாய் குமரனே!

கார்த்திகைப் பெண்கள் வளர்த்ததனால்
"கார்த்திகேயன" ஆனவனே!
தந்தைக்கு உபதேசம் செய்ததனால்
"தகப்பன் சாமி" ஆனவனே!
சூரனைச் சங்காரம் செய்ததனால்
"சூரசங்காரன்" ஆனவனே!
உலகை வலம்வந்தும் மாங்கனி பெறாததால்
"பழனியாண்டவன்" ஆனவனே!
முன்னைத் தலைநகர் நல்லையிலே
உறைகின்ற "அலங்காரக் கந்தனே!"
கந்தா!கடம்பா!கலியுக வரதா!
காத்தருள்வாய் குமரனே!



நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்

## வெற்றிவேற் பெருமான் வீதி உலா வருகின்றார்

வான் உயர்ந்த கோபுரங்கள்
நல்லைக் கந்தனின் புகழ் பரப்ப
அட்டதிக்கிலும் இருந்து அலை
என திரண்டுவரும் அடியார்
கூட்டம் அரோகரா கோஷமிட
அந்தணர்கள் மறைஓத
பக்தர்கள் பஜனைபாட
வள்ளி தெய்வயானை அம்மனுடன்
வரங்கள் தருவதற்கு
வளமுடனே வருகின்றார்

வ.பத்மவதனி
கோண்டாவில்.

## கருணை கொள்ளாயோ முருகா!




அன்பின் திருவுருவே
அருளின் உறைவிடமே
இன்னல் தீர்ப்பவனே
இருளை அகற்றுபவனே
வாழத்தெரியாமல் பலர்
வாழ்வை தொலைத்துவிட்டும் பலர்
உன்தாழ் பணிகிறார்கள்-அவர்தமை
உறவென கருணை கொள்ளாயோ

க.கஜிக்காந்,மட்டுவில் தெற்கு.

## சாவடிகள் இல்லாத வாழ்வளிப்பாய்

காவடிகள் ஆடி வந்தும் வழிபட்டோம்- உனை
பாவடிகள் கொண்டும் இங்கு தொழுகின்றோம்-உன்
சேவடியே தஞ்சமென வந்துள்ளோம்-எமக்கு
சாவடிகள் இல்லாத வாழ்வளிப்பாய்.

புலோலியூர், வேல்நந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை ஆதீன ஸ்தாபகர் பீடாரோஹண விழா இன்று

யாழ்ப்பாணத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் என்ற ஒரு சமயம் வளர்க்கும் ஆதீனத்தை நிறுவியதோடு தமது தொண்டையினாலேயே தொண்டாற்றி கதாப்பிரசங்கம் மூலம் தமிழ்வளர்த்தவர் நல்லைக்குருமணி அவர்கள்.

1966ஆவது ஆண்டிலே நல்லூர் ஆலய மேற்குவீதி மூலையிலே ஓர் ஆதீனத்தை உருவாக்கி சமயப் பணி செய்த முதலாவது குருமஹா சந்நிதானத்தை இன்று நினைவு கூருகின்றோம்.


இன்றைய சுபநாளான கார்த்திகைத் திருநாளிலே 49 ஆண்டுகள் பூர்த்தியாகி 50 ஆவது ஆண்டிலே காலடி பதிக்கின்ற இந்த நல்லை ஆதீனத்தின் பீடாரோஹண விழா வெகு சிறப்பாக இன்று நடைபெறுகின்றது.

அடியார்கள் பலரும் ஒன்று சேர்ந்து இன்றைய நல்லை ஆதீனத்தின் பீடாரோஹண விழாவிலே அங்கிருக்கும் குருமூர்த்த ஆலயத்திலே எழுந்தருளியிருக்கின்ற சிவலிங்கப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் செய்வித்து மதியம் மாகேஸ்வர பூஜையும் நிகழ்த்துவர்.

இப்பொழுது ஆதீன முதல்வராக விளங்குகின்ற இரண்டாவது குருமஹா சந்நிதானம் அவர்கள் தமது குருவான ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் பத்மமலர் திருப்பாதம் பணிந்து குருபூஜை செய்து பீடாரோஹண அலங்காரத்துடன் பட்டணப் பிரவேசம் நிகழ்த்தி அனைவருக்கும் ஆசிகள் வழங்கி ஆசீர்வதிப்பர்.

கதாப்பிரங்கத்துக்கே தம்மை அர்ப்பணித்து யாழ்ப்பாணத்திலே சைவமும் தமிழும் தழைத்தோங்க முற்றுமுழுதாகப் பாடுபட்டவர் குருமணி அவர்களே! எங்கெல்லாம் சமய விழாக்கள், விசேட விழாக்கள் நடக்கின்றதோ அங்கெல்லாம் சென்று கதை செய்து அறப் பணியாற்றி சமயசேவை செய்தவர் சுவாமிகளாவர்.

திருத்தொண்டர் புராணம், திருவிளையாடற் புராணம் முதலியனவற்றோடு இதிகாசங்களாக விளங்குகின்ற இராமாயணம், மகாபாரதம் என்பவற்றையும் சேர்த்து சிறப்பாகக் கதாப் பிரசங்கம் செய்த பெருமை இவரையே சாரும்.



நெற்றியிலே நீறணிந்து உருத்திராட்சம் தரித்து சிவநாம உச்சாடனம் செய்து எல்லோருக்கும் சைவத்தின் மேன்மையை எடுத்துரைத்து பிரசங்கம் செய்தே வாழ்க்கை வண்டியைச் செலுத்தி வெற்றிகண்டவர் சுவாமிகள். நல் லூர் கோயிலில் இரவு 11.30 மணியளவில் நிறைவுக்கு வரும் சங்கீத கதாப்பிரசங்கம் கேட்பதற்கென்றே யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் அடியார் வருவர். அதுமாத்திரமின்றி நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைப் போற்றித் துதிக்க வேண்டுமென்ற நோக்கில் அடியார்கள் பலர் வந்து சேர்வர்.

யாழ்.மாவட்டத்தில் நல்லை ஆதீன ஸ்தாபகரான குருமணி அவர்களின் கதாப்பிரசங்கம் நடைபெறாத கோயில்களே இல்லை என்னுமளவுக்கு மூலை முடுக்கெல்லாம் சென்று கதை செய்தவர் சுவாமிகள். இவரது தோற்றப்பொலிவு சைவத்தையும் தமிழையும் தமது இரு கண்களெனப் போற்றி வளர்த்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைப் போன்றதே. அவரையும் இவரையும் ஒன்றாகப் பார்க்கலாம்.

பேச்சு வன்மையும் இசைத் திறனும் கைவரப்பெற்றவரான நல்லை சுவாமிகள் அழகாகக் கதை சொல்லி, இடையிடையே பாராட்டுக்களும் பாடி நல்ல முறையாகப் பிரசங்கம் செய்வார். மகாபாரதத்திலே பீமனும் துரியோதனனும் போர் செய்தமை பற்றிக் கூறுகின்றபோது அப்படியே படம்பிடித்துக்காட்டுமாப்போல் கண்முன்னே காட்சிகளை விரிவுபடுத்தும் திறன் யாருக்குமே வராது. சொல்லும்போது கண்முன்னே படம் தெரியும்.

இப்போது ஆதீன முதல்வராக இருக்கின்ற இரண்டாவத் குருமகா சந்திதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும் அவரைப்போலவே ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வுகளிலும் வேறு சமய விழாக்களிலும் அருளாசியுரை வழங்கி மக்களை நேர்வழிப்படுத்தி நன்னெறியில் வாழ உதவிபுரிந்து வருகிறார். இவரும் நல்ல தோற்றப்பொலிவு நிரம்பப் பெற்றவர்.

இவரது வழிநடத்தலில் நல்லை ஆதீனத்தில் பாலர் வகுப்புக்கள், சங்கீத வகுப்புக்கள், சமய பாட வகுப்புக்கள், பண்டிதபால பண்டித வகுப்புக்கள் என்பன நல்ல முறையில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆதலால் இன்று பீடாரோஹண விழாக்காணும் நல்லை ஆதீனத்தின் வளர்ச்சிக்கு நம்மாலான உதவிகளைச் செய்து சைவமும் தமிழும் வளர எமது பங்களிப்பும் ஆதரவும் என்றென்றும் உண்டு என்பதை நிலைநிறுத்தி எல்லோரும் நலமே வாழ இறையருளைப் பிரார்த்தித்து நிற்போமாக.

கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன்

முப்பத்திரண்டாம் குரு பட்டாபிஷேக
குருதரிசன வாழ்த்து 04.09.2015

சைவ சித்தாந்த பண்டிதர், சிவாகம உபதேச
வாசஸ்பதி அருட்பிரபாகர சீலர்
சிவஸ்ரீ. தியாக.சோமாஸ்கந்த ராஜக் குருக்கள்
அவர்களின் (தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி
வட பத்திரகாளியம்மன் ஆதீன ஹர்த்தா)
(BA,Dip-In Educated, MA. பிரதி அதிபர்)
32 ஆம் குரு பட்டாபிஷேக நிறைவு நாள் வாழ்த்து



*மங்களஞ்சேர் செந்தமிழை ஆய்ந்து கற்றாய்*
*மாண்புடைய வட மொழியாம் கலை ஞானத்தால்*
*வீங்கு புகழ் வல்லுனனென் றுலகை மேத்தும்*
*வித்தகனாம் சோமையா நல்லோய் வாழி!*
*நீங்கரிய நற்குணமே பண்பாய் கொண்டாய்*
*நாமெல்லாம் செய்நன்றி மறப்போ மல்லோம்*
*பாங்குடைய பத்திரகாளிதான் பணிகின்றோம் உன்நாமம்*
*வாழி·நீ பல்லாண்டு மல்கி வாழி!*

குணமென்னும் குன்றேறி நின்று குருவாய்
மணம் வீசும் மைந்தன் தனஞ்சயக் குருவுடன்
கணமும் கவலைகாிற்றுப் பெருவாழ்வு வாழ்கவென
குணமனையாட்டி விஜிதாராமனோடும் வாழ்த்தினமே.


(1659)

அன்புடன் வாழ்த்தும்
சிவத்திரு. தம்பு - இரா மச்சந்திரன்,தும்பளை வில்வளை ஸ்ரீ மகா பிரத்தியங்கிரா
காளியம்மன் தேவஸ்தானம் (TP No. 077 620 2716)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு மாநாட்டில் பங்குகொள்ளாத சரத் பொன்சேகா

(கொழும்பு)

**பாதுகாப்பு அமைச்சினால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் சர்வதேச பாதுகாப்பு மாநாட்டில் இம்முறை முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பங்கேற்கவில்லை என தெரியவருகின்றது. கொழும்பில் அமைந்துள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இம்முறை இந்த மாநாடு நடத்தப்பட்டது.**

இந்த மாநாட்டில் 350 இற்கும் மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றிருந்தனர். எனினும், அதி உயர் இராணுவ பதவி வழங்கப்பட்டுள்ள பீல்ட் மார்ஷல்' சரத் பொன்சேகா இந்த மாநாட்டில் பங்கேற்கவில்லை.

இது குறித்து பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்ற உள்நாட்டுப் பிரமுகர்கள் மட்டுமன்றி வெளிநாட்டு பிரமுகர்களும் ஆச்சரியத்தை வெளியிட்டிருந்தனர்.

இந்த மாநாட்டுக்கு சரத் பொன்சேகாவிற்கு அழைப்பு விடுக்கவில்லை என குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. எனினும், மாநாட்டில் பங்கேற்குமாறு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிற்கு உத்தியோகபூர்வமாக அழைப்பு 'விடுக்கப்பட்டதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் கிருசாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

அழைப்பு விடுக்கப்பட்டது, எனினும் மாநாட்டில் பங்கேற்கவில்லை. அதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. அவர் எமது முன்னாள் இராணுவத் தளபதி, நாட்டுக்காக அர்ப்பணிப்புக்களைச் செய்தவர்.


மாநாட்டின் பிரதான விருந்தினர்களில் ஒருவராக அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

மங்கள விளக்கு ஏற்றும் முக்கிய விருந்தினர்களுக்கான சகல விடயங்களிலும் சரத் பொன்சேகாவின் பெயரும் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும் என்ன காரணத்திற்காக அவர் அமர்வுகளில் பங்கேற்கவில்லை என்பது தெரியவில்லை என இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அழைப்பு கிடைக்கப்பெற்ற போது வேறும் அழைப்புக்களும் ஏற்கனவே கிடைக்கப் பெற்றிருந்ததாக சரத் பொன்சேகாவின் பிரத்தியேக செயலாளர் தயா பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே விடுக்கப்பட்ட அழைப்புக்களை ஏற்றுக் கொண்டதனால் இந்த அழைப்பிற்கு அமைய நிகழ்வில் பங்கேற்க முடியவில்லை.

மேலும், போர் தொடர்பில் பாரியளவில் அனுபவமுடைய சரத் பொன்சேகாவிற்கு அதனை சர்வதேசத்துடன் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.



போர் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் ஆண்டு தோறும் இந்த மாநாடு நடத்தப்பட்டு வருகின்றது.

முதல் தடவையாகவே சரத் பொன்சேகாவிற்கு இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 90 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 100 |
| தக்காளி | 80 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 |
| கோவா | 80 | 70 | 80 |
| கரட் | 100 | 100 | 160 |
| பூசணி | 40 | 40 | 60 |
| புடோல் | 60 | 40 | 60 |
| வாழைக்காய் | 80 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 60 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 80 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 120 |
| பயற்றங்காய் | 30 | 30 | 40 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 |
| பீற்றூட் | 30 | 40 | 50 |
| கறிமிளகாய் | 130 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 120 | 100 | 100 |
| போஞ்சி | 150 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 80 | 70 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 35-40 |
| இராசவள்ளி | 120 | 250 | – |
| வெங்காயப்பூ | 150 | 160 | 200 |
| முள்ளங்கி | 30 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 478

கிருபன் கிங்




நிலு என்சி




சாய் சாய்நாத்




கிசோ கிசோ




சீத்தா பெருமாள்




சுதன் பிரோ




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள், அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளக விசாரணையை முன்னெடுக்க மகிந்தவின் வாக்குறுதிதான் காரணம்

## லக்ஸ்மன் கிரியெல்ல விளக்கம்

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதி காரணமாக உள்ளக விசாரணை நடத்த வேண்டியேற்பட்டுள்ளதாக அவைத் தலைவர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

போரில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் உள்ளக விசாரணை நடத்தப்படும் என அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான் கீ மூனுடன் கூட்டாக அறிவிப்பு ஒன்றைச் செய்திருந்தார்.

இந்த அறிவிப்பிற்கு அமைய செயற்படாமையே உள்ளக விசாரணைகளை இப்போது ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கான காரணமாகும்.

இலங்கை ஐக்கிய நாடுகள் பிரகடனத்தில் கையொப்பமிட்டுள்ளது. அதன் அடிப்படையில் செயற்பட வேண்டியது அவசியமானதாகும்.

கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய 7 விடயங்கள் குறித்து விசாரணை நடத்துமாறு கோரப்பட்டிருந்தது.

இந்தப் பரிந்துரைகளுக்கு அமைய மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஒரு விசாரணைகளையும் நடத்தவில்லை.

கடந்த அரசாங்கம் சர்வதேச சமூகத்துடன் சுமுகமான உறவுகளைப் பேணத் தவறியுள்ளது.

1971 ஆம் ஆண்டு பிரேமவதி மானப்பெரும கொலைச் சம்பவம் இடம்பெற்றது. இது அனைவரினதும் கவனத்திற்கும் உள்ளான ஓர் விடயமாகும்.

1994 ஆம் ஆண்டு கிருஷாந்தி குமாரசுவாமி கொலை சர்வதேச அளவில் பேசப்பட்டது. நாம் சட்டத்தை மதிக்க வேண்டும். சர்வதேசத்துடன் நாம் செயற்படும் விதத்திற்கு அமைய சில விடயங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கடந்த அரசாங்கம் சர்வதேச சமூகத்துடன் உரிய முறையில் இணைந்து செயற்படவில்லை.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முதலாவதாக மகிந்த ராஜபக்ஷ, வாசுதேவ நாணயக்கார போன்றவர்களே ஜெனீவா சென்றனர். அப்போது நாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகித்தோம்.

சர்வதேசத்துடன் முரண்பட்டு செயற்படுவது பொருத்தமாகாது. நாம் நெகிழ்வு போக்குடன் செயற்பட வேண்டும். நாம் பிழை செய்திருந்தால் அதனை ஒப்புக்கொள்ள வேண்டும் என லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அவைத் தலைவராக பதவி ஏற்றுக்கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# தேசிய டெங்கு ஒழிப்பு வாரம்; செப். 10-16 வரை அறிவிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரையின் பேரில் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரையான ஏழு நாட்களும் தேசிய டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இக்காலப் பகுதியில் வீடுகள் மற்றும் சுற்றுச் சூழலை சோதனையிட வரும் அதிகாரிகள் குழுவினருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் பாலித்த மஹிபால பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, இம்முறை தேசிய ரீதியில் முதற் தடவையாக டெங்கு நுளம்பு பரவுவதற்கேற்ற சூழலை வைத்திருப்பவர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை வழங்கப்படுவதுடன் அவர்களுக்கெதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் ஹசித்த திசேரா தெரிவித்தார்.

"டெங்கு நோய் தொற்றை மேலும் குறைத்துக் கொள்வோம்" என்னும் தொனிப் பொருளில் முன்னெடுக்கப்படவுள்ள விசேட தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் குறித்து விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன் போதே மேற்கண்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 10 ஆயிரத்தால் குறைவடைந்துள்ளது. அதேநேரம் கடந்த வருடம் 71 ஆகவிருந்த டெங்கு மரணம் இவ்வருடம் 30 ஆக குறைவடைந்திருப்பதாகவும் பணிப்பாளர் நாயகம் பாலித்த மஹிபால கூறினார்.

இந்நோய்க்கான அறிகுறிகள் ஆரம்பத்திலேயே இனங்காணப்பட்டால் மரணத்தை தடுக்க முடியுமென நம்பிக்கை தெரிவித்த அவர், இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமாயின் அருகிலுள்ள அரசாங்க வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெறுமாறும் எக்காரணம் கொண்டும் பரசிட்டமோலை தவிர்ந்த வேறு வலி நிவாரணி அல்லது மாத்திரைகளை உட்கொள்ள வேண்டாமென்றும் அவர் கேட்டுக்கொண்டார். (இ-7)

# சு.க. மாநாட்டில் பங்கேற்காத முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 64ஆவது ஆண்டு பூர்த்தி மாநாடு நேற்று முன்தினம் பொலனறுவையில் நடைபெற்றது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 64வது ஆண்டு பூர்த்தி மாநாடு நேற்று முன்தினம் பிற்பகல் பொலனறுவையில் கதுருவெல ரஜரட்ட நவோதைய மைதானத்தில் நடைபெற்றது. கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் பங்கேற்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவர்களான 'சந்திரிகா குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.



அதேபோல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் அனைவருக்கும் கட்சியின் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

கட்சியின் 64ஆவது ஆண்டு பூர்த்தி மாநாட்டில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான நிமால் சிறிபாலடி சில்வா, சுசில் பிரேமஜயந்த, அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திசாநாயக்க உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டிருந்தனர். எனினும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த நிகழ்வில் கலந்து கொள்வார் என தெரிவிக்கப்பட போதிலும் நேற்று முன்தினம் மாநாட்டில் அவர் பங்கேற்கவில்லை.

மேலும் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்ட பின் அவரது தலைமையில் நடைபெற்ற முதலாவது கட்சி மாநாடு இது என்பதும் குறிப்பிடத்தக்க விசேட அம்சமாகும்.

இந்த மாநாட்டில் பங்கேற்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் மேடையில் அருகருகே இருந்து உரையாடிக்கொண்டிருந்ததையும் காணக் கூடியதாக இருந்தது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## பொறுப்பற்ற விலங்குகள்! பொறுப்பேற்ற தெய்வங்கள்!

மனிதனையும் விலங்கையும் பிரிக்கும் மெல்லிய கோடு எது தெரியுமா? எல்லா விலங்குகளுக்கும் முதுகுத் தண்டு குறுக்குவாட்டில் இருக்கும். மனிதனுக்கு மட்டும் மேல் நோக்கி நிமிர்ந்த முதுகுத் தண்டு...அதுதான் மனிதனையும் விலங்கையும் பிரிக்கிறது என்று சொல்லலாமா? முடியாது .ஏன் என்றால் குரங்கு நிமிர்ந்து உட்காரும் தன்மையுடையது. அதற்கு குறுக்காக நடக்கவும் நேராக நிமிரவும் முடியும். குரங்கு மனிதனுக்கும் விலங்கிற்கும் பாலமாக இருக்கிறது. எனவே முதுகுத்தண்டு நேராக இருத்தல் என்பது மனிதனையும் விலங்கையும் பிரிக்காது.

பின் எது தான் அந்தக் கோடு ?பொறுப்புணர்ச்சி என்கிறேன் நான். குஜராத் பூகம்பத்தின் போது பூகம்பம் வரப்போவதை உணர்ந்த நாய் ஒன்று தன்னை வளர்க்கும் குடும்பத்தினரை வீட்டிலிருந்த வெளியே வரவழைத்து விட்டது. திரும்பத்திரும்ப அவர்கள் வீட்டிற்குள் நுழைந்த போதும் அது விடவில்லை...திரும்பத் திரும்ப துணியை பிடித்து இழுத்து வெளியில் அழைத்து வந்தது. பூகம்பத்தால் வீடு இடிந்த போது வெளியில் இருந்த அவர்கள் தப்பினார்கள். நாயைக் கட்டிக் கொண்டு கண்ணீர் விட்டு அழுதார்கள். நாயின் பொறுப்புணர்ச்சி பலரையும் அதிசயப்பட வைத்தது!

ஒரு விலங்கு பொறுப்பாக நடந்து கொள்ளும் என்று யாரும் எதிர்பார்ப்பதில்லை. அதனால் அதற்கு மனிதர் மேல் இருந்த பொறுப்புணர்ச்சி அதிகமாக விளம்பரப்படுத்தப்பட்டது. பாராட்டப்பட்டது. அப்படியானால் தன் சமூகத்தவரிடம பொறுப்பு அற்று நடக்கும் மனிதர்களை விலங்குகள் என்று சொல்லலாமா? சொல்லலாம்... தவறில்லை.

காவலுக்கு நியமித்த பொலிஸ்காரர் லாக்-அப்பில் ஒரு பெண்ணை பலாத்காரம் செய்த கதைபேப்பரில் வருகிறது. அந்தப் பொலிஸ்காரர் பொறுப்பற்றவர். எனவே அந்த நாயை விட மோசமான விலங்கு...சரிதானே! இந்த மாதிரி பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்ளும் எவருமே விலங்கு தான். கடன் வாங்கி விட்டுத் தராதவர், சொன்ன சொல் காப்பாற்றாதவர், ஒப்புக் கொண்ட வேலையை ஒப்புக் கொண்ட மாதிரி செய்யாமல் தாறுமாறாகச் செய்கின்றவர் எல்லோருமே விலங்குகள்தான்.

இன்றைக்கு காதலர்கள் பலர் சுதந்திரமாகக் காதலிக்கிறார்கள். பெண்களைப் பாதுகாப்பாக வைத்திருந்த பழைய சமூகம் காட்டுமிராண்டித் தனமானது என்று கூறிக் கூவி சினிமாவிற்கும் ஹோட்டலுக்கும ஆண்களோடு பெண்கள் சமமாக அலைகிறார்கள். ஸ்கூட்டரிலும் பைக்கிலும் திருமணத்திற்கு முன்பே ஆண்மீது சரிந்தும் பிணைந்தும் புரட்சி செய்கிறார்கள். அத்தோடு முடிந்ததா?

குப்பையில் பிள்ளைகளை எறியும் பெற்றோர் விலங்கு. அதிலிருந்து அந்தப் பிள்ளையை எடுத்துத் தனக்குச் சம்பந்தமே இல்லாத அதன் கண்ணீரைத் துடைத்து, பசிக்கு பால் வார்த்து நோய்க்கு மருந்தூற்றி, படிப்பிற்கும் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும் மதர் தெரசா, உதவும் கரங்கள் வித்தியாகர் போன்ற இவர்கள் எல்லாம் மனிதர்களா? இல்லை தெய்வங்கள். தொடர்பில்லாத எவருடைய துயரையும் துடைப்பவர்கள் தெய்வங்களே. ஒரு சில மனிதர்கள் விலங்காக மாறிய போது, அவர்கள் தட்டிக்கழித்த பொறுப்பையும் தான் ஏற்றுத் தன் வாழ்வைத் தியாகம் செய்யும் மனிதனும தெய்வம் தான். ஒரு சின்ன யோசனை.

வி.ஆர்.எஸ்.பெற்றவர்கள், அமெரிக்காவில் மகனும் மகளும் இருக்க இந்தியாவில் வாழும் ஆரோக்கியமான பெற்றோர்கள், பணக்கவலை இல்லாதவர்கள் இந்த மாதிரி சமூக சேவை நிறுவனங்களோடு தொடர்பு வைத்து தங்கள் நேரத்தை பயனுடையது ஆக்கலாம். கூட்டம் மிகுந்த கோவில்களுக்குப் போய் எட்டு மணி நேரம் வரிசையில் நின்று சாமி கும்பிடுவதை விடத் தெய்வீகமான விடயம் இது!

அன்பிற்கு ஏங்கும் சின்னச் சின்னக் குழந்தைகள் உதவும் கரங்கள் சேவை நிறுவனத்தில் கண்ணில் ஏக்கத்தோடு காத்திருக்கின்றன! எதையும் எதிர் பார்க்கவில்லை... நீங்கள் தூக்கிக் கொஞ்ச வேண்டும், தோளோடு தோள் அணைக்க வேண்டும் என்று மட்டுமே ஏங்குகிறார்கள். செலவில்லாத அன்பைச் சிறிது நேரம் செலுத்தினால் பத்துக் கோவில் கட்டிய புண்ணியம் உங்களுக்கு உண்டு. தட்சினேஸ்வரம் காளி கோவில் முன்பு புழு துளைத்துக் கிடந்த பிச்சை காரனை எடுத்துக் குளிப்பாட்டிச் சோறு போட்டார் மதர் தெரசா.

தன்னை அலட்சியப்படுத்திய சமூகத்தில் தன்னை அரவணைத்துக் காப்பாற்றிய மதர் தெரசாவைப் பார்த்து அவன் உதடுகள் துடித்தன. அம்மா... நான் பல நாட்கள் காளி கோவில் வாசலிலேயே கிடந்திருக்கிறேன். ஆனால் அந்தக் காளி மாதாவை இன்று தான் நேரில் தரிசிக்கிறேன்... நீங்கள் தான் எனக்கு அந்தக் காளி! என்றான்.

நீங்கள் பொன்னோ பொருளோ, பாலோ, பழமோ பிறருக்குக் கொடுக்க முடியவில்லை என்றாலும் பரவாயில்லை... உதவும் கரங்கள் சேவை நிறுவனம் அவற்றைத் தாய் தந்தை அற்ற பிள்ளைகளுக்கு தருகின்றது. ஆனால் அங்கிருக்கும் நூற்றுக் கணக் கான பிள்ளைகளையும் அங்குள்ள சமூக சேவகர்களே எவ்வளவு நேரம் கொஞ்சிக் கொண்டிருக்க முடியும் ...நேரத்தை ஒதுக்கி அந்தக் குழந்தைகளோடு விளையாட கொஞ்ச முன்வாருங்கள்.

அவர்களது பெற்றோர்கள் மனிதர்களா? தங்கள் கடமையைப் பொறுப்பைத் தட்டிக் கழித்தவர்கள்... என் கணிப்பில் விலங்குகள். அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டால் நீங்களும் தெய்வமாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலப்பதிப்புக் கற்களின் சிறந்த தெரிவுகளுக்கு . . . . .

அழகிய பல்வேறு வடிவமைப்புக்களைக்கொண்ட
நிலப்பதிப்புக் கற்களை யாழ், வவுனியாவிலுள்ள
காட்சியறைகளில் பார்வையிடலாம்

பிரனவன் என்ரபிறைசஸ்
இல.635, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
077-0256640

எங்கும் இல்லாத புதிய வடிவமைப்புக்களை கொண்ட தூக்கணங்களை பெற்றுக்கொள்ளலாம்

சிறி மீனாட்சி
நகை அகம்
Sree Meenakchi Nagai Aham
Dealers in 22 Kt Solid Gold Jewellery
இல. 183, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
Tel : 021 222 6109

சகல பாமசி & குறோசரீஸ்
பொருட்களையும்
நியாயமான விலையில்
பெற்றுக் கொள்ள
றூபா பன்முக வர்த்தகம்
இல. 104A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 2479

சரவணா புடைவையகம்
SARAVANA TEXS
எமது கிளைகள் வேறெங்கும் இல்லை
இல. 526,529
பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

"றோயல் சுத்தமான
தேங்காய் எண்ணெய்"

சுப்பு:- என்ன மணியண்ணே, கடைக்கு வந்து எல்லாத் தேங்கா யெண்ணைப் போத்தலையும் முறைச்சுப் பார்க்கிறியள்?

மணி:- இதில உள்ள எல்லாத்தையும் வாங்கி சமைச்சுப் பாத்திட்டன் ஒண்டிலையும் வாசனையோ சுவையோ இல்லை. எல்லாம் கலப்படம்.

சுப்பு:- இதுக்கு ஏன் குழப்பம். நேரடியா சிவா நறுமணப் பூங்கா கடைக்கு போங்கோ. அங்க "றோயல் தேங்காய் எண்ணையிண்ட" சாம்பிளை வாங்கி கையில் பூசி மணந்து பாருங்கோ. பிறகு நீங்க அந்தத் தேங்காயெண்ணையை மட்டும் தான் வாங்குவியள். தரமான சுவையான, வாசனையான சாப்பாட்டிற்கு "றோயல் சுத்தமான தேங்காயெண்ணையை" அடிக்க எதுவும் இல்லையண்ணே. இப்ப 200ml, 500ml அளவில கிடைக்குது. சாப்பாட்டிற்கு மட்டுமல்லாம தலைக்கும் வைக்கலாம்.

மணி:- அப்ப ஒரு கல்லில இரண்டு மாங்காய் எண்டு சொல்லு சுப்பு. எல்லா கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 2567

Packed By
Royal Industry
Colombo-13
(1789)

ஸ்ரீ சிவாஞ்சனா ஜுவல்லறி
Sri Sivanchchuna Jewellery
தங்கப்பவுண் நகை வியாபாரம்
Manufacturers Gold jewels
149 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
Tel: 021 222 9227


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# சூழலியல் மாற்றத்தில் அனர்த்தங்களின் பங்கு

அத்துடன் கண்ணைக் கவரும் வகையில் இமயமலைப்பகுதியில் மிக உயர்ந்த எவரெஸ்ட் சிகரம் இயற்கையின் கோரத் தாண்டவத்திற்கு உட்பட்டதால் அப்பகுதி இயற்கை வனப்பை தலைகீழாக்கிவிட்டது. இலங்கையும் வெகுவிரைவில் இவ்வாறானகோரத்தாண்டவத்திற்கு உட்படலாம் என அறிவிக்கப்பட்டு வருகின்றமையால் நாங்களும் நமது சூழலும் ஆபத்தின் விளிம்பில் உள்ளமையே வெளிப்படையாக்கி வருகின்றது. இன்று இயற்கை அனர்த்தங்களை எதிர்வு கூறக்கூடிய தொழில்நுட்பங்கள் வளர்ச்சியடைந்துள்ளன. அதாவது புவிநடுக்கங்கள், சுனாமி, சூறாவளிகள் மற்றும் வெள்ளப் பெருக்குகள் முதலான அனர்த்தங்களில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான வசதிகள் வளர்ச்சியடைந்துள்ளன. உதாரணமாக புவிநடுக்கங்களை அளவிடுகின்ற தொழில் நுட்பங்கள் மற்றும் சுனாமி எச்சரிக்கை மையங்கள் முதலானவை மக்களுக்கானசேவையை வழங்குகின்றன. இவற்றினைக் கவனத்தில் கொண்டு பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் நகர ஏதுவாக அமைகின்றது. இவ்வாறான தொழில்நுட்பங்கள் மனிதர்களினுடைய அன்றாட வாழ்க்கைக்கு சாதகமான தாக்கங்களையே ஏற்படுத்தியிருந்தாலும் கூட துரித சனத்தொகை அதிகரிப்பிற்கேற்ப உணவை வழங்க வேண்டிய நிலையில், சிறிய நிலத்தினைப பயன்படுத்தி அதிக உற்பத்திப் பொருட்களைப் பெறவேண்டும் எனும் நிலைமை உள்ளதுடன் உயர் உற்பத்தியைப் பெறவேண்டும் என்பதற்காக பயிர்களுக்கு களைக்கொல்லிகள், கிருமி நாசினிகள், உரங்கள் முதலானவற்றைப் பயன் படுத்த வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகளுக்கு தொழில்நுட்பம் அவசியமாகிறது. அவ்வடிப்படையில்தான் இயந்திரங்கள், விமானங்கள் போன்ற கருவிகள் பயன்படுத்தப்படுகின்றது. இவை மனித சமூகத்தில் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. உதாரணமாக ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் இவ்வாறான தொழில்நுட்பங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றது. அதாவது கிருமிநாசினிகளைப் பயிர்களுக்கு தெளிப்பதற்காக விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதனால் அதன் செறிவு பரவலடைந்து செல்வதனால் அச்சூழல் தொகுதியில் வாழ்கின்ற பல்வேறு வகையான உயிரினங்கள் ஆபத்துக்கு உள்ளாவதுடன், அவ்வாறான ஆபத்துக்கள் உணவுச்சங்கிலி, உணவு வலைகளில் ஆபத்துக்களை ஏற்படுத்துவதனால் மனிதருக்கான உணவுகளில் பாதிப்பு ஏற்படுத்தப்படுகின்றது. மேலும் இரசாயன உரங்களை உற்பத்தி செய்யும் ஆலைகள் புகையைக் கக்குகின்றன. உரத்தைச் சுமந்து செல்லும் வாகனங்கள் புகையைக் கக்குகின்றன. உப்பு உரம் நைட்ரசன் காற்றைக் கக்குகிறது. பயிர்த் தொழிலில் பயன்படுத்தும் இதர பொருள் உற்பத்தி செய்யும் ஆலைகளும் புகையைக் கக்குகின்றன. நிலத்தில் பயன்படுத்தும் இயந்திரங்கள் புகையைக் கக்குகின்றன. ஆக மொத்தத்தில் இவை அனைத்தும் வளிமண்டலத்தை தாக்குவதால் வளி மாசடைகிறது. போக்குவரத்துத் தொழில்நுட்பங்கள் மனிதர்களினுடைய அன்றாட வாழ்க்கையில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. கடலில் பயணிக்கும் கப்பல்கள் வெளியேற்றும் கழிவுகள் நீருடன் கலத்தல், மற்றும் எண்ணைக் கப்பல்கள் சமுத்திரத்தில் முழ்குதல் முதலானவை மனிதர்களினுடைய அன்றாட வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அதாவது சமுத்திரங்களில் பயணிக்கும் எண்ணைக்கப்பல்கள் தொழில்நுட்பக்கோளாறு காரணமாக நீரினுள் மூழ்குகின்றன. உதாரணமாக 1989 இல் அலாஸ்காக் கரையோரத்தில் எச்சென், வாஸ்டெஸ் எனும் எண்ணைக்கப்பல்கள் விபத்துக்குள்ளானதால் 10 மில்லியன் கலன் பெற்றோலியம் அலாஸ்கா முழுவதும் பரவியது. இதனால் பல உயிர்களுக்கு அழிவுகள் ஏற்பட்டதுடன் ஐதரோக்காபன் கடல் நீருடன் கலந்தமையினால் உணவுச்சங்கிலி பாழாகிப் போனது. இதனால் அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிப்புக்களுக்கு உள்ளாகினர். அதேபோல் வான் வெளிப்போக்குவரத்துத் தொழில்நுட்பங்காரணமாக மனிதர்களினுடைய அன்றாட வாழ்க்கை பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதாவது அண்டவெளியில் பறக்கும் விமானங்கள் வெளியேற்றுகின்ற வாயுக்கள் மற்றும் அண்டவெளியில் வெடித்துச்சிதறும் விமானங்கள் முதலானவை வளிமண்டல சூழலுக்கு பெரிதும் ஆபத்துக்களை ஏற்படுத்துகின்றன. அதாவது விமானங்கள் வெளியேறுகின்ற காபன்டை ஒக்சைட்டுக்கள், நைரஜன் ஒட்சைட்டுக்கள் முதலானவை வளிமண்டல வாயுக்கட்டமைப்பினை சீர்குலைய வைக்கின்றன. அதாவது இவ்வாறான செயற்பாடுகளிளால் சுமார் 3.5% மான வாயுக்கள் வளிமண்டலத்தில் இணைந்து கொள்கின்றன. இதனால் காலநிலை மாற்றங்கள் நிகழுகின்றன. அதாவது காலந்தாழ்த்திய மழை, அமில மழை மற்றும் தோல் புற்று நோய்கள் முதான பல்வேறு பாதிப்புக்கள் மனித சமூகத்திற்கு ஏற்படுகின்றது. இவ்வாறான தொழில்நுட்பங்கள் மனிதர்களினுடைய அன்றாட இயல்பு வாழ்க்கையில் பாதகமான தாக்கங்களையே ஏற்படுத்தி வருகின்றன. மேலும் தற்காலத்தில் யுத்த நடவடிக்கைகளுக்கு அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாம் உலக மகாயுத்த கால ப்பகுதியில் (1945) ஐக்கிய அமெ ரிக்காவினால் ஜப்பானுக்கு அணுகுண்டு போடப்பட்டது. இந்த அணு குண்டினுடைய வீரியம் இன்றும் ஓய்வடையாத நிலையில் காணப்படுகின்றது. தற்காலத்திலும் கிரோசிமா, நாகசாகி பகுதியில் பிறக்கின்ற குழந்தைகள் ஊனமுற்ற நிலையில் பிறக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அது மட்டுமின்றி



நச்சுவாயுக்கள் பயன் படுத்துவதும், Cluster குண்டுகள் பயன்படுத்துதல் முதலானவையும் யுத்த நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையும், அதனால் பல்லாயிரககணக்கான மனித உயிர்கள் அழிக்கப்பட்டு வருவதுடன் ஒட்டுமொத்த சூழலையே தரம் குறைத்து வருகின்றது. எமது நாடும் இதற்கு விதி விலக்கல்ல. இந்தியாவில் உள்ள DCW எனும் நிறுவனம் பல ஆண்டுகளாக சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தி வருகிறது. காற்றிலும், கடலிலும், நிலத்திலும் இத்தொழிற்சாலை வெளியேற்றும் கழிவுகள் கலந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. இத் தொழிற்சாலையின் கழிவுகள் மொத்தமாக சேர்த்து வைக்கப்பட்டு, பெரும்பாலும் மழைக்காலங்களின் போது திறந்து விடப்படுகிறது. அவ்வாறு திறந்து விடப்படும் கழிவு நீர் காயல்பட்டினம், வீரபாண்டியன்பட்டினம், திருச்செந்தூர், ஆலந்தலை, மணப்பாடு உள்ளிட்ட பல ஊர்களின் கடற்பரப்பில் கலந்து நீல நிறத்தில் காட்சியளிக்க வேண்டிய கடல் முற்றிலும் செந்நிறமாக மாறிவிடுகிறது. இப்பகுதிசுற்றுச்சூழல் பெரிதும் மாசடைவதால் ஏராளமான மக்கள் புற்றுநோய் உள்ளிட்ட பலவிதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். (அவர்களில் பலர் இறந்தும் உள்ளனர்.) மக்களை இருளில் இருந்து வெளிச்சத்திற்கு கொண்டு செல்கின்ற மின்சாரம் தொடர்பான தொழில்நுட்ப வளர்ச்சியானது முன்னேற்றப்பாதையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது அதாவது அதிகரித்துச் செல்லும் சனத்தொகைக்கு ஏற்ப அவர்களுக்கான அடிப்படைத்தேவைகளும் பூர்த்தி செய்யவேண்டிய அவசியம் காணப்படுகின்றது. அந்தடிப்படையில் நீர் மின் உற்பத்தி அதிகரித்துள்ளதுடன் அதற்கு இணையான அனல்மின் உற்பத்திகளும் அதிகரித்துள்ளன. எடுத்துக்காட்டாக இலங்கையில் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தைக் குறிப்பிடலாம். இவை குறைந்த விலையில் அதிக மக்களுக்கான மின்சாரத் தேவையை நிறைவு செய்து வருகின்றது. அது மட்டுமல்லாமல் சூரிய ஒளியைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கின்ற தொழில்நுட்பமும் வளர்ச்சியடைந்துள்ளது. உதாரணமாக ஜப்பான், அமெரிக்கா முதலான வளர்ச்சியடைந்த நாடுகளில் இவ்வாறான முறைகளைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கப்படடு மக்கள் பாவனைக்கு விடப்படுகின்றது. இவ்வாறான தொழில்நுட்ப வளர்ச்சியானது மனிதர்களினுடைய அன்றாட வாழ்க்கையில் சாதகமான தாக்கங்களையே ஏற்படுத்தி வருகின்றது. இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள சுன்னாகம் பகுதியில் இயங்கி வந்த எண்ணெய் எரிபொருட்கள் ஊடான மின் உற்பத்தி நிலையத்தின் கழிவு எண்ணெய் பாதுகாப்பற்ற விதத்தில் நிலத்தில் விடப்பட்டதன் விளைவாகவே நீர் மாசு ஏற்பட்டுள்ளது. இவ் மின்னுற்பத்தி நிலையத்திலிருந்து நிலத்தில் விடப்பட்ட கழிவு ஒயில் தற்போது சுன்னாகம், உடுவில், ஏழாலை, மல்லாகம், தெல்லிப்பழை, இணுவில், கட்டுவன், அளவெட்டி, இளவாலை, சண்டிலப்பாய் பிரதேசங்களில் இந்நிலை பரவியுள்ளது. குறிப்பாக உடுவில் சுகாதாரப்பிரிவில் 16 கிராம அலுவலர் பிரிவில் மட்டுமே கிட்டத்தட்ட 1400 கிணறுகள் இப்பிரச்சினையை எதிர் கொண்டுள்ளது. அதேபோல் வலி.வடக்கு சுகாதாரப்பிரிவில் 800 இற்கு மேற்பட்ட கிணறுகளிலும் இப் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதுடன் சுமார் ஆயிரக்கணக்கான மக்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அப்பகுதி விவசாய நிலம் பாதிப்பை சந்தித்து வருகின்றது. சுற்றுச்சூழல் பிரச்சினைகளைப் பொறுத்தவரை நிலைத்த வளர்ச்சி நடவடிக் கைகளே நமக்குத் தேவை. ஏனெனில் காலநிலை மாற்றம் என்பது தற்போது மட்டும் நிலவி மறைந்து விடப்போகிற ஒரு பிரச்சினையுமல்ல அல்லது இது ஒரு நோயுமல்ல. யோசனையற்று இயற்கையை அழிப்பதன் விளைவாக வாழ்வாதார அமைப்புகள் சிதைவதன் முழுமையான அறிகுறி அது. இதற்கு நாம் பெரும் விலையை திரும்பச் செலுத்த வேண்டி இருக்கிறது. அந்த நோயை தீர்ப்பதற்கான வழிமுறையை நாம் கண்டறிய வேண்டி இருக்கிறது. இன்று பெரும்பாலான நதிகள் காணாமல் போய்விட்டன. அவையின்றி தண்ணீர்த் தேவையைக் கூட நம்மால் பூர்த்தி செய்ய முடியவில்லை. காடுகள் அழிந்து கொண்டிருக்கின்றன. காடுகள் இன்றி நமது நீர் ஆதாரங்கள் மறுஉற்பத்தி செய்து கொள்ள முடியாது. மேலும் மண்வளம் அதிவேகமாக மறைந்து கொண்டிருக்கிறது. இவையில்லாமல் போவதால் விவசாயம் பாதிக்கப்பட்டு வருகின்றது. இந்த இடங்களில் தான் நேர்மறை செயற்பாடுகள் தேவை. சுற்றுச்சூழலை மீட்டெடுக்க மக்களுக்கான அறிவியல் உதவும். குறிப்பட்ட காலத்தில் எதையும் மீட்டெடுக்க முடியும். ஆனால் அந்த மீட்பு நமது வாழ்நாளுக்குள் நடக்கப்போகிறதா என்பதே நம்முன் உள்ள கேள்வி. அதேநேரம் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தற்போதுள்ள அணுகுமுறைகளை மாற்றிக் கொள்ளவில்லை என்றால், தீவிர முயற்சிகளை நடைமுறைப் படுத்தாவிட்டால் மோசமான நிலையை அடையப் போகிறோம் என்பது வெளிப்படையான ஒன்றாகிவிடும். இயன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டால் போதும் என்கின்ற உலக நாடுகள் கொண்டுள்ள ஆர்வமானது உயிர் போகத்தான் போகிறது, மெதுவாக சிகிச்சை செய்து கொள்ளலாம் என்று கூறுவது போல இருக்கிறது. எனவே இவ்வாறான நமது மனப்பான்மைகள் மாற வேண்டும்.

(முற்றும்)

**வி.காயத்திரி**

## வாரத்திற்கு ஒரு புதிர்! 142

தன்னுடைய நாட்டில் காணப்படும் அனைத்து கண்டல் காடுகளையும் (Mangrove Forests) பாதுகாக்க நடவடிக்கை எடுத்த உலகின் முதல் நாடு எது?

**புதிர் 142 இற்கான விடைகளை 14.09.2015 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

**கு.குணாளன்**
**ஆசிரியர், பிரிவு A**
**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,**
**விரிவுரையாளர் (தகுதிகாண்)**
**மீன்பிடி விஞ்ஞானத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்**

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**
**இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவில் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.**

## புதிர் 141 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

சுவர்ணலதா.கெங்காதரன்
யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்

**புதிர் 141 க்கான கேள்வியும் விடையும்:**

உலகின் மிகப்பெரிய பவளப் பாறை தொகுதி (CORAL REEF) காணப்படும் இடம் எது?

அவுஸ்திரேலியா(Great Barrier Reef)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 142

சரியான விடை:-..............................
முழுப்பெயர்:-..............................
முகவரி:-..............................
தொ.பே. இல:..............................
கையொப்பம்:..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றிவிட்டதா அமெரிக்கா?

...இதற்கு இணங்காவிட்டால் சர்வதேச நகர்வு ஆபத்தாக அமையும் என்பதை தற்போதைய அரசாங்கம் அறியும். எனவே, சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்படத் தயாராக இருக்கிறது இப்போதைய அரசாங்கம். இந்தச் சாதகமான சூழலைப் பயன்படுத்திக் கொள்ள முனைந்திருக்கிறது அமெரிக்கா.

மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் உள்நாட்டில் விசாரணை நடத்துவதாக கொடுத்திருக்கும் வாக்குறுதியை ஏற்றுக் கொண்டு, நல்லிணக்கத்துக்கான புறச் சூழலை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அதற்கு கால அவகாசம் கொடுக்கலாம் என்ற நிலைப்பாட்டுக்கு வந்திருக்கிறது அமெரிக்கா.

அதைவிட முக்கியமான ஒரு விடயம், ஜெனிவாவில் இம்முறை ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரப் போவதாகவும் அமெரிக்கா கூறியிருக்கிறது. அதுவும் அந்த தீர்மானம் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து அதன் இணக்கப்பாட்டுடன் கொண்டு வரப்படவுள்ளது.

ஜெனிவாவில் நிறைவேற்றப்படும் சில தீர்மானங்கள், சம்பந்தப்பட்ட நாடுகளின் அரசாங்கங்களின் இணக்கப்பாட்டுடன் கொண்டு வரப்படும். அதற்காக இராஜதந்திர அழுத்தங்கள் அல்லது வேறு வகையிலான அழுத்தங்கள் பின்புலத்தில் கொடுக்கப்படுவதுண்டு.

இரண்டாவது சம்பந்தப்பட்ட நாட்டின் ஒப்புதலைப் பெறாமல் நிறைவேற்றப்படும். ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் மூன்றுக்குமே, இலங்கை அரசின் ஒப்புதலைப் பெற முயற்சிக்கப்பட்டது ஆனால் அதுமுடியவில்லை. அதற்காக பல்வேறு தடைகள் -அழுத்தங்கள் விதிக்கப்பட்டன.

ஆனால் இப்போதைய அரசாங்கத்தை அமெரிக்கா தனது கைக்குள் போட்டுக் கொண்டிருக்கிறது. அதனால் சுலபமாக, இந்த தீர்மானத்தை நிறைவேற்ற முடியும். கடந்த மூன்று தீர்மானங்களையும் நிறைவேற்றுவதற்கு அமெரிக்கா கடுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. காரணம், இந்தியா, ரஷ்யா, சீனா என்று முப்பெரும் வல்லரசுகள் இலங்கைக்கு துணையாக இருந்தன.

கடைசித் தீர்மானம் நிறைவேற்றிய போதுகூட இந்தியா உள்ளிட்ட 12 நாடுகள நடுநிலை வகித்திருந்தன. இதனால், இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை ஒன்று கோரி தீர்மானத்தை முன்வைத்தால் நிச்சயமாக இந்தியா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் அதனை எதிர்க்கும் என்பது அமெரிக்காவுக்குத் தெரியும். எனவே, அவ்வாறானதொரு தீர்மானத்தை முன்வைத்து, ரிஸ்க் எடுப்பதை விட, இலங்கையுடன் இணைந்து



தீர்மானத்தை முன்வைப்பது அமெரிக்காவுக்கும் சுலபமானது.

ஆனால் தீர்மானத்தின் உள்ளடக்கம் எவ்வாறு அமையும் என்பது ஐ.நா விசாரணை அறிக்கை வெளியான பின்னர் தான் இருநாடுகளும் இணைந்து தீர்மானிக்கும் என்று கூறியிருக்கிறார் நிஷா பிஸ்வால்.

**ஐ.நா விசாரணை அறிக்கையின் உள்ளடக்கம் ஏதோ வெளியே தெரியாதது போல அவர் கதை விட்டிருக்கிறார். ஆனால், உள்ளடக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் சிலருக்கும் கூடத் தெரிந்திருப்பதாகத் தகவல்.** எனவே நிஷா பிஸ்வால் அதை அறிந்திருக்க மாட்டார் எனக் கருத முடியாது.

அமெரிக்கா அடுத்த தீர்மானத்தை ஏற்கனவே வரைந்திருக்கும். ஆனால் இரகசியமாக அது வைக்கப்பட்டிருக்கும்.

இந்தமுறை தீர்மானம் இலங்கை அரசாங்கத்தின் இணக்கத்துடன் நிறைவேற்றப்படும் போது, எந்த நாடும் அதை எதிர்க்க முடியாது.

அதேவேளை, இலங்கையுடன் இணைந்து - உள்நாட்டு விசாரணைக்கு ஆதரவளிக்கும் இந்த தீர்மானம் நிறைவேற்றப்படும் போது அது முற்றிலும் இலங்கை அரசாங்கத்துக்குச் சாதகமாக இருக்கும் என்று கருத முடியாது. சில நுட்பமான விடயங்களின் ஊடாக அது கொளுக்கிப் பிடி ஒன்றை போடவே முயற்சிக்கும்.

ஆனால் இது தமிழர் தரப்பை பொறுத்தவரையில் ஏமாற்றமளிக்கும் ஒன்றாகவே இருக்கப் போகிறது. ஏனென்றால் சர்வதேச விசாரணையே அவர்களின் எதிர்பார்ப்பாக இருந்தது.

அதற்கு வாய்ப்பு மறுக்கப்படும் போது, தமிழர் தரப்பு என்ன செய்யப் போகிறது?

**கிடைக்கும் இடைவெளிகளின் ஊடாக பொறுப்புக்கூறலை நகர்த்தப் போகிறதா- அல்லது சர்வதேச சமூகத்துடன் முரண்பட்டு நிற்கப்போகிறதா?** பொறுத்திருந்து பார்க்கலாம். (முற்றும்)

**-என்.கண்ணன்-**

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 270**

## அஹங்காரத்தை விடுதல்

...அனுபவித்தவர்கள் மட்டுமே தெளிவாக விளக்க முடியும்.

சரணாகதியின் அர்த்தத்தை, அதை அனுபவிக்காத ஒருவனிடம் கேட்டீர்களானால், அவன், எல்லாவற்றையும் வெறுமனே கடவுளிடம் கொடுத்துவிடு, அவ்வளவுதான் என்பான்.

அது சரணாகதி அல்ல.

ஒருவர் என்னிடம் வந்து கேட்டார், நான் எல்லாவற்றையும் கடவுளிடம் சரணாகதி செய்துவிட்டால், சரியாகிவிடுமா?

நான் சொன்னேன், ஆமாம், நீ உண்மையிலேயே எல்லாவற்றையும் கடவுளிடம் சரணாகதி செய்துவிட்டால், எல்லாம் சரியாகிவிடும்.

அவர் 3 நாட்கள் கழித்து திரும்பி வந்து என்னிடம் சொன்னார், ஸ்வாமிஜி, நான் எல்லாவற்றையும் கடவுளிடம் சரணாகதி செய்துவிட்டேன்.

நான் சந்தோஷமடைந்து அவரிடம் கேட்டேன், இப்பொழுது நீ எங்கே போகிறாய்? அவர் சொன்னார், குடிக்கும் இடத்திற்கு அவர் தொடர்ந்தார், இப்பொழுதிலிருந்து, நான் என்ன செய்தாலும் அதற்குக் கடவுள்தான் பொறுப்பு.

இது உண்மையில் உங்களையே முட்டாளாக்கிக்கொள்ளும் ஒருவழி.

அவர் உண்மையிலேயே சரணாகதி செய்திருந்தால், குடிப்பழக்கத்தையும் சரணாகதி செய்திருப்பார்.

அவரால் அதற்குப் பிறகு குடிக்கக் கூட இயலாது.



ராமகிருஷ்ணர் அழகாகச் சொல்கிறார், உண்மையான சரணாகதி உங்கள் இதயத்தில் இருந்து வருமானால், கடவுள் உங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு அடியிலும் வழி நடத்திச் செல்வார்.

உங்களால் ஒருபோதும் தவறு செய்ய முடியாது. சரணாகதி உங்கள் உள்ளுக்குள் இருந்து மலராமல் வெறும் உதட்டளவில் இருக்குமானால் நீங்கள் உங்களையும் மற்றவர்களையும் முட்டாளாக்கிக்கொண்டிருப்பீர்கள்.

சரணாகதி எப்பொழுதும் உங்களை பிரபஞ்ச இருப்புத்தன்மை பற்றியே எண்ண வைத்துக் கொண்டு இருக்கும். நீங்கள் கொஞ்சம் கொஞ்சமாக உங்கள் சொந்த அடையாளத்தையும் அஹங்காரத்தையும் இழந்துவிடுவீர்கள்.

பாகவதத்தில் ஒரு கோபிகை தனக்குள் சொல்லிக்கொள்வதாக ஒரு சுலோகம் வருகிறது, என்னால் கிருஷ்ணனைத் தவிர வேறெதையும் நினைக்க முடியவில்லை.

என் மனதை அவனிடம் சரணாகதி செய்துவிட்டேன். நான் வேறு எதையாவது நினைக்க வேண்டுமானால் என் மனதை மீண்டும் அவனிடமிருந்து எடுத்துக்கொள்ள வேண்டும்; ஆனால், அது எவ்வாறு முடியும்?

ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அவரது கடைசி நாட்களில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். அவர் பலருக்கும் பலவிதமான வியாதிகளையும் குணப்படுத்தியிருக்கிறார்.

ஒருவர் அவரிடம் கேட்டார், நீங்கள் ஏன் ஒரே ஒரு கணம் உங்கள் மனதை உங்கள் வியாதியின் மீது வைத்து குணப்படுத்திக் கொள்ளக்கூடாது?

அவர் சொன்னார், நான் என் மனதை அந்த எல்லையற்ற சக்தியிடம் சரணாகதி செய்துவிட்டேன், அதை எவ்வாறு என் வியாதியின் மீது வைப்பதற்காக திருப்பி எடுத்துக் கொள்ள முடியும்! இதுவே உண்மையான சரணாகதி. *(தொடரும்)*

**பரமஹம்ஸ சுவாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஸ்வரூபம் எடுக்கும் அகதிகள் பிரச்சினை

## 4250 அகதிகள் கிரேக்கத்திற்கு வருகை

(எதென்ஸ்)

**உள்நாட்டுப்போர் நடந்து வருகிற சிரியா, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து ஐரோப்பாவுக்கு அகதிகள் சென்று தஞ்சம் புகுவது அதிகரித்து வருகிறது. முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அகதிகள் வந்து குவிவது ஐரோப்பிய நாடுகளுக்கு பெருத்த தலைவலியாக அமைந்துள்ளது.**




இந்த நிலையில், லெஸ்போஸில் இருந்து 1,749 அகதிகளுடன் ஒரு கப்பல், கிரீஸ் நாட்டின் தலைநகரான எதென்ஸ் அருகில் உள்ள பிரேயஸ் துறைமுகத்தை நேற்று முன்தினம் சென்றடைந்தது. இதே போன்று நேற்று மற்றொரு கப்பலில் 2,500 அகதிகள் அங்கு சென்றடைந்தனர்.

இதற்கிடையே மத்திய கிழக்கு பகுதி மக்கள் பலர், ஹங்கேரி நாட்டில் உள்ள ரயில் நிலையம் ஒன்றின் வெளியே தவிப்பதாகவும், அவர்கள் ஐரோப்பிய யூனியனுக்குள் நுழைவதை பொலிஸார் தடுத்து விட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

கடந்த வாரத்தில் மட்டும், கிரீஸ் நாட்டில் 23 ஆயிரம் அகதிகள் குவிந்திருப்பதாக அந்த தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டு இதுவரை அந்த நாட்டில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் அகதிகள் குவிந்துள்ளனர். இது தொடர்பாக கிரீஸ் நாட்டின் ஜனாதிபதி புரோ கோபிஸ் பாவ் லோபவுலோஸ், பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹாலண்டேயுடன் தொடர்பு கொண்டு பேசினார்.

அகதிகள் பிரச்சினை தொடர்பாக ஐரோப்பிய யூனியன் அளவில் கூடி விவாதிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (3-7)

## பாடசாலை மாணவிக்கு 17 கத்திக் குத்து

சிவகங்கை மாவட்டத்தில் மாணவிக்கு கத்திக் குத்து நடந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் உள்ள உயர்தர பாடசாலையில் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் நந்தினி என்பவர் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை பாடசாலை முடிந்து வீட்டுக்கு திரும்பிக்கொண்டிருக்கையில், காந்தி சிலை அருகே இளைஞர் ஒருவர் கத்தியால் குத்தியுள்ளார்.

நந்தினியின் உடலில் 17 இடங்களில் கொலை வெறியோடு குத்தியுள்ளார். அப்போது அக்கம் பக்கத்தினர் அவரை பிடித்துள்ளனர். விசாரணையில் அவரது பெயர் சந்திரசேகரன் என தெரியவந்துள்ளது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் அவரை கைது செய்தனர்.

படுகாயம் அடைந்த நந்தினியை சிவகங்கை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். (3-7)

## பாரிஸ் நகரில் தீ; 8 பேர் உயிரிழப்பு!




(பரிஸ்)

பிரான்ஸின் பரிஸ் நகரிலுள்ள குடியிருப்புக் கட்டடமொன்றில் நேற்று இடம்பெற்ற பாரிய தீ அனர்த்தத்தில் சிக்கி இரு சிறுவர்கள் உட்பட 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரான்ஸ் தலைநகரின் வடக்கேயுள்ள அந்தக் குடியிருப்புக் கட்டடத்தில் ஏற்பட்ட தீயை 100 இற்கு மேற்பட்ட தீயணைப்புப் படைவீரர்கள் போராடி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இந்த தீ அனர்த்தத்தின் போது உயிருடன் மீட்கப்பட்டுள்ள நால்வரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் மொன்ட்மார்ட்றி குன்றின் அடிவாரத்திலுள்ள மேற்படி குடியிருப்புக் கட்டடத்தில் இடம்பெற்ற இந்தத் தீ அனர்த்தத்திற்கான காரணத்தைக் கண்டறிய அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த தீயால் அந்தப் பிரதேசத்திலுள்ள சுமார் 15 கட்டடங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சின் பேச்சாளர் பியறி ஹென்றி பிரென்டெற் தெரிவித்துள்ளார். (3-7)

## பாகிஸ்தான் பெஷாவர் படுகொலை ஐந்து பேருக்கு மரணதண்டனை!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பெஷாவர் நகரில் கடந்த ஆண்டு இராணுவ வீரர்களின் குழந்தைகள் படிக்கும் பாடசாலைக்குள் புகுந்து 150 மாணவர்களை தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர். இந்த சம்பவத்துக்கு பிறகு தீவிரவாதிகளுக்கு கடும் தண்டனை வழங்கப்பட்டு வருகிறது. ஏராளமான பேருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மேலும் 5 தீவிரவாதிகளுக்கு நேற்று முன்தினம் இராணுவநீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது. இவர்கள் 5 பேரும் பெண்கள் பாடசாலை ஒன்றில் தாக்குதல் நடத்தியவர்கள். மேலும் பல்வேறு கொலைகளிலும் சம்மந்தப்பட்டவர்கள் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (3-7)

## தீவிரவாதிகள் 6 பேர் பலி

(பெஷாவர்)

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப் பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வரும் அல்-கொய்தா மற்றும் ஐ.எஸ். தீவிரவாதிகளை குறிவைத்து அமெரிக்கா கடந்த ஒரு வருட மாக தொடர் வான்வழி தாக்குதல்களை நடத்தி வருகிறது.

நேற்று முன்தினம் ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதியான பாகிஸ்தானின் வடக்கு வாஜிரிஸ்தான் மாகாணத்துக்குட்பட்ட தத்தாகெல் என்ற கிராமத்தில் உள்ள தீவிரவாத குடியிருப்பு பகுதியை குறிவைத்து அமெரிக்கா ஆளில்லா விமான தாக்குதலை நடத்தியது.

இது குறித்து பாகிஸ்தான் பாதுகாப்பு அதிகாரிகள் கூறுகையில், நேற்று முன்தினம் தத்தாகெல் கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் 2 ஏவுகணைகளை வீசி அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளது. தாக்குதல் நடந்த வீட்டில் வெளிநாட்டு தீவிரவாதிகள் பதுங்கியிருந்ததாக நம்பப்படுகிறது என்று கூறினர்.

மேலும், இந்த தாக்குதலில் தீவிரவாதிகள் என சந்தேகப்படும் 6 பேர் பலியாகி உள்ளதாகவும், பலர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் கூறிய அவர்கள் பாதுகாப்பு காரணங்களை கருதி உயிரிழந்தவர்களின் விபரங்களை வெளியிட முடியாது என்றும் தெரிவித்துள்ளார். (3-7)

## 3 லட்சம் இராணுவத்தினரை ஆட்குறைப்பு செய்கிறது சீனா



உலகத்தில் அதிக அளவு மக்கள் தொகையை கொண்ட சீனா பக்கத்து நாடுகளை அச்சுறுத்தும் வகையில் இராணுவத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. ஒவ்வொரு வருடமும் இராணுவத்திற்கென பட்ஜெட்டில் அதிகப்படியான நிதி ஒதுக்கப்படும்.

அப்படி இராணுவ பலத்தை அதிகரித்துக்கொண்டிருந்த சீனா தற்போது 3 இலட்சம் இராணுவ வீரர்களை ஆட்குறைப்பு செய்யப் போவதாக சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

சீன மக்களுக்கு எதிரான ஜப்பான் ஆக்கிரமிப்பு மற்றும் உலக பாசிச எதிர்ப்பு போரில் வெற்றி பெற்ற 70 [illegible] கொண்டாடப்பட்டது. இதில் கலந்து கொண்ட ஜனாதிபதி இத்தகவலை வெளியிட்டார். பொருளாதார உயர்வுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க இருப்பதாலும், தரமான வீரர்களை கொண்டு வலிமையான இராணுவத்தை உருவாக்கவும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இப்படி ஆட்குறைப்பு செய்வது இது நான்காவது முறையாகும். இதற்கு முன் 1987 ஆம் ஆண்டு 4.238 மில்லியனில் இருந்து 3.235 மில்லியனாக குறைக்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டு 5 இலட்சம், 2003 முதல் 2005 வரை 2 இலட்சம் வீரர்கள் ஆட்குறைப்பு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3-7)

## இந்தியாவில் வீதி விபத்துக்களினால் வருடாந்தம் 75,000 இளைஞர்கள் பலி

(புதுடில்லி)

இந்தியா முழுவதும் வீதி விபத்துகளில் 75 ஆயிரம் இளைஞர்கள் உயிரிழந்துள்ளதாக மத்திய போக்குவரத்து அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு வீதி விபத்துகளில் உயிரிழந்தவர்கள் குறித்த அறிக்கையை வெளியிட்ட மத்திய போக்குவரத்து அமைச்சகம், இதில் 53 வீதம் இளைஞர்கள் என தெரிவித்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு உலக சுகாதார அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், இளைஞர்களே அதிகமாக வீதி விபத்துகளில் உயிரிழப்பதாக குறிப்பிட்டுள்ளது.

ஆண்டு தோறும் உலகமெங்கும் 3 இலட்சத்திற்கும் அதிகமான இளைஞர்கள் வீதி விபத்துகளில் பரிதாபமாக உயிரிழப்பதாக அந்த அறிக்கையில் உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

வீதி பாதுகாப்பு குறித்து இளைஞர்களிடம் அதிக விழிப்பு ணர்வை உருவாக்க வேண்டியது கட்டாயம் என தெரிவித்துள்ள அந்த அமைப்பு, குடும்பத்தினரும் இதில் முக்கிய பங்காற்ற வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளது.

வீதி விபத்துகள் அதிகம் நடப்பதாக பட்டியலிடப்பட்டுள்ள 14 மாநிலங்களில் முதலிடத்தில் உத்தரபிரதேசமும், இரண்டாமிடத்தில் தமிழ்நாடும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

## 18 பேர் கடத்தல்

ஈராக்கில் ஒரு கட்டுமானத் தளத்திலிருந்து தமது நாட்டவர்கள் 18 பேர். துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் என துருக்கி தெரிவித்துள்ளது.

தலைநகர் பக்தாத்தில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் விளையாட்டு மையமொன்றில், கேரவேனில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த தொழிலாளர்களை இராணுவ சீருடையில் முகமூடி அணிந்தபடி வந்தவர்கள் கடத்திச் சென்றுள்ளனர். இந்தக் கடத்தலுக்கு யார் காரணம் என்பது தெரியவில்லை என அதிகாரிகள் கூறியுள்ளனர்.


இதேவேளை இஸ்லாமிய தேசம் குழுவினர் என்று தம்மைக்கூறிக் கொள்ளும் குழுவினருக்கு எதிரான விமானத் தாக்குதல்களை துருக்கி அண்மையில் ஆரம்பித்திருந்தது. (3-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 6 மாதங்கள் தொடர்ந்து சிகிச்சை பெறுவதன்மூலம் காசநோய்த் தாக்கத்திலிருந்து முற்றாக விடுபடலாம்

## யாழ். மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி அறிவுரை

நேர்காணல்:- பொ.சோபிகா




காசநோயின் தாக்கத்திலிருந்து முற்று முழுதாக குணமடைந்து ஆரோக்கியமாக வாழ தொடர்ந்து 6 மாதங்கள் சிகிச்சை பெற்றுக் கொண்டால் போதும் என யாழ். மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி ஆர்.மாணிக்கவாசகன் தெரிவித்தார். காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி ஆர். மாணிக்கவாசகனுடனான நேர்காணலில் காசநோய் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

காசநோய் கடந்த காலங்களை விட தற்போது உலகளாவிய ரீதியில் குறைவடைந்து வருகின்றது.

உலகின் மூன்றில் ஒரு பங்கு மக்கள் இந்த காசநோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இருப்பினும் இன்றைய நவீன மருத்துவ பரிசோதனைகள் மூலம் இலகுவில் இந்த நோயை கண்டறிந்து சிகிச்சை பெற்று வருவதால் படிப்படியாக காசநோய்த்தாக்கம் குறைவடைந்து வருகின்றது.

இந்த காசநோயானது மைக்கோ பக்டீரியம் டியூபர்க்குலோஸிஸ் (Myco bacterium Tuberculosis) எனும் நோய்க்கிருமியின் தாக்கத்தால் ஏற்படுகின்றது.

இது இரண்டு வகையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அதாவது நுரையீரலில் ஏற்படும் காசநோய், மற்றைய நுரையீரல் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் ஏற்படும் காசநோய் என வகைப்படுத்தப்படுகிறது.

இந்த நோய் குறிப்பாக காற்றின் மூலமே பரவல் அடைகின்றது. அதாவது ஒருவரின் இருமல், தும்மல், சளி இவற்றின் மூலம் அடுத்தவருக்கு பரவுகின்றது. உரிய முறையில் சிகிச்சை பெறாவிட்டால் உடலில் பல்வேறு வகையான பாதிப்புக்களை ஏற்படுத்தி உயிராபத்தையும் ஏற்படுத்தும்.

இந்த நோய்க்குரிய சுவாச அறிகுறிகளாக இரண்டு வாரத்துக்கு மேற்பட்ட இருமல், சளியுடன் இரத்தம் வெளியேறுதல், மூச்சு விடுவதற்கு கடினமாக இருத்தல், நெஞ்சு வலி, நெஞ்சு நோ என்பன ஏற்படும்.

உடலமைப்புகளுக்குரிய அறிகுறிகளாக காய்ச்சல், இரவு நேரங்களில் வியர்வை, பசியின்மை, திடீரென எடை குறைதல் அத்துடன் உடற்சோர்வு என்பன அறிகுறிகளாக தென்படும்.

எக்ஸ்ரே, சளிப்பரிசோதனை மற்றும் இரத்தப் பரிசோதனை செய்வதன் மூலம் இந்த நோயை எளிதில் கண்டறிந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

இந்தக் காச நோயானது உடலில் எந்தப்பகுதியையும் தாக்கக் கூடிய நோயாக இருப்பதால் நீரிழிவு நோயாளர்கள், போசாக்குக் குறைபாடுள்ளவர்கள், வயது முதிர்ந்தவர்கள் போன்றோரை இலகுவில் பாதிக்கின்றது. குறிப்பாக புகைத்தல் மற்றும் மதுபான பழக்கம் உள்ளவர்களையும் எச்.ஐ.வி தொற்றுள்ள நோயாளர்களையும் மிக விரைவில் பாதிக்கின்றது.

ஆனால், சிறுவர்களுக்கு சுவாசப்பையில் ஏற்படும் காச நோய்த் தொற்று மிக மிக குறைவாகவே காணப்படுகின்றது. அவர்களுக்கு சுவாசப்பை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் அதாவது கூடுதலாக நிணநீர் முடிச்சுக்களில் இந்த நோய் தொற்று ஏற்படுகின்றது. இது பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை.

யாழ். மாவட்டத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் காசநோயின் தாக்கம் படிப்படியாக குறைவடைந்து வருகின்றது.

கடந்த 2010 ஆம் ஆண்டு 420 காசநோயாளர்கள் இனம் காணப்பட்ட போதிலும் 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் 192 காசநோயாளர்களே இனம் காணப்பட்டுள்ளனர்.

அதிகாரிகளின் தொடர்ச்சியான மற்றும் கடுமையாக நடவடிக்கைகளினால் இந்த நோய்த்தாக்கம் குறைவடைந்து வருகின்றது.

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்தில் காச நோய்க்குரிய அனைத்துப் பரிசோதனைகளும் சிகிச்சைகளும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரேயொரு காசநோய் சிகிச்சை நிலையமாக இது காணப்படுகின்றது.



காசநோய் சிகிச்சைக்குரிய விடுதி கோப்பாய் ஆதார வைத்தியசாலையில் அமைந்துள்ளது.

காசநோய் கிளைச் சிகிச்சை நிலையங்களாக சங்கானை, தெல்லிப் பழை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, பருத்தித் துறை ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ளன. இங்கு ஒவ்வொரு மாதமும் தொடர்ச்சியாக காசநோய் சிகிச்சைகள், பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

**சங்கானை சிகிச்சை நிலையத்தில் மாதத்தின் முதல் திங்கட்கிழமையும், தெல்லிப் பழை சிகிச்சை நிலையத்தில் மாதத்தின் முதல் வியாழக்கிழமையும், ஊர்காவற்றுறை சிகிச்சை நிலையத்தில் மாதத்தின் 2 ஆவது வியாழக்கிழமையும், சாவகச்சேரி சிகிச்சை நிலையத்தில் மாதத்தின் 3 ஆவது வெள்ளிக்கிழமையும், பருத்தித்துறை சிகிச்சை நிலையத்தில் மாதத்தின் 4ஆவது வெள்ளிக்கிழமையிலும் இந்த சிகிச்சை நிலையம் இயங்குகின்றது.**

காசநோய் தொற்று சனத்தொகை நெரிசலாக வாழும் இடங்களிலும் நலன்புரி முகாம், சிறைச்சாலை மற்றும் மக்கள் ஒன்றுகூடும் பொதுவான இடங்களில் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

அந்த வகையில் யாழ்ப்பாணம், பருத்தித் துறை, கரவெட்டி, வேலணை, கோப்பாய், நல்லூர், சங்கானை, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, உடுவில், சாவகச்சேரி போன்ற பிரதேசங்களில் காசநோய் தொற்று இனம் காணப் பட்டுள்ளது. இனங்காணப்பட்டவர்கள் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

கடந்த மாதம் சிகிச்சை பெறாமல் இருந்த 3 நோயாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒழுங்கு முறையில் தற்போது சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றார்கள்.

காசநோயை முற்றாக இல்லாது ஒழிக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகக்கொண்டு செயற்பட்டு வருகின்றோம். அதற்கு ஏற்ற வகையில் மக்களுக்கு தொடர்ச்சியான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இந்த நடவடிக்கைக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமாக இருக்கின்றது.



அந்த வகையில் இரண்டு வாரங்களுக்கு மேற்பட்ட இருமல் இருப்பவர்கள் மார்பு நோய் சிகிச்சை நிலையத்துக்கு தாமாகவே முன் வந்து காசநோய் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். பரிசோதனைகள் மூலம் நோய்த் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் ஒழுங்கு முறையில் வரையறுக்கப்பட்ட காலத்திற்கு இடைவிடாது சிகிச்சைகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

**காசநோய்க்குரிய சிகிச்சைகளை யாழ். பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்திலும், கிளைச் சிகிச்சை நிலையங்களிலும் இலவசமாக மேற்கொள்ள முடியும்.** ஒழுங்கு முறையில் சிகிச்சை பெறத் தவறும் பட்சத்தில் குறித்த பகுதி பொதுச் சுகாதார பரிசோதகரினால் அவசர அறிவித்தல் வழங்கப்பட்டும் அந்த அறிவித்தலையும் உதாசீனம் செய்யும் பட்சத்தில் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒழுங்கான சிகிச்சை முறையை பின்பற்ற வைக்கப் படுவர்.

அத்துடன் காசநோய் தொற்றுள்ள ஒருவர் இனம்காணப்பட்டால் அவருடைய குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் காசநோய் பரிசோதனை செய்துகொள்ள வேண்டியது கட்டாயமாகும்.



**மிக முக்கியமாக பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் காசநோய் தொற்று இருப்பதாக உறுதி செய்து கொண்டால் அவர்கள் 2 வாரங்களுக்கு காசநோய்ச் சிகிச்சை விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டும். இது மிக முக்கியமாக கடைப்பிடிக்க வேண்டிய விடயம் ஆகும்.**

சமூக அந்தஸ்து காரணமாக சிலர் காசநோய் சிகிச்சையை பெற்றுக்கொள்வதற்கு முன்வருவதில்லை. குறிப்பாக இளம் பெண்கள் இந்த நிலைக்கு உள்ளாகின்றார்கள். அதாவது காசநோய் சிகிச்சை பெற்றுவந்தால் சமூகத்தில் தமக்கு பின்னடைவு ஏற்படுகின்றது என்றும், இந்த நோய் குணப்படுத்த முடியாதது என்றும் பலருக்கும் பரப்பப்படுகின்ற ஒன்று என தாம் ஒதுக்கப்படுவார்கள் என அச்சம் கொண்டு சிகிச்சை பெறுவதற்கு பின்னிற்கிறார்கள்.

இந்த சிகிச்சை முறையானது மிகவும் இரகசியமான முறையில் பேணப்படுகின்ற ஒன்று என அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். முறையாக சிகிச்சை பெற்றுவந்தால் இந்த நோயை முற்று முழுதாக குணப்படுத்த முடியும் என்பதை பொதுமக்கள் புரிந்து நடக்க வேண்டும்.

நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்கள் நல்ல காற்றோட்டமான அறையில் இருக்க வேண்டும். தும்மும் போதும் இருமும் போதும் வாயை மூடி பாதுகாப்பான முறையில் செயற்படுவது நல்லது.

சிறுவர்களுக்கு இந்த நோய் தொற்றாமல் இருப்பதற்கு தடுப்பு ஊசிகளைப் போடுவது அவசியம் ஆகும்.

இந்த நோயில் இருந்து முற்றுமுழுதாக குணமடைய தொடர்ச்சியாக 6 மாதங்கள் சிகிச்சை பெறுவதோடு மருத்துவரின் ஆலோசனைகளை உரிய முறையில் கேட்டறிந்து ஒழுங்கு முறையான உணவுப் பழக்கவழக்



கங்களை கடைப்பிடித்து செயற்படுத்துவதன் மூலம் காச நோய்த் தாக்கத்திலிருந்தும் அதனால் ஏற்படும் உயிரிழப்பிலிருந்தும் தப்பிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிக் கொடுப்பவன் தலைபோன பின்
இன்னதெனத் திரும்பிப் பார்க்கும் ஈயை
ஒப்பான். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஆறாய் ஓடிய குருதி கழுவவோ எதிர்க்கட்சித் தலைவர் பதவி!

இயேசு பிரானின் இராப்போசனம் நடக்கிறது. இயேசுவின் சீடர்களில் ஒருவனாகிய யூதாஸ் கரியோத் இயேசுவைக் காட்டிக் கொடுக்கிறான்.

முப்பது வெள்ளிக்காசுக்காக அந்தக் காட்டிக் கொடுப்பெனும் துரோகத்தனம் நடந்தேறுகிறது.

சுவடே; இயேசுவோடு உடனிருந்த இராயப்பர் திருச் சபையின் முதலாவது பாப்பரசர் என்ற பெருமைக் குரியவர். இயேசுவோடு உடனிருந்ததை மூன்றுமுறை மறுதலிக்கின்றார்.

இறைமகனின் வாழ்வில் நடந்த துரோகத்தனங் கள் இன்றுவரை நீடித்தாலும் இலங்கைத் தமிழினத் தில் அந்தத் துரோகத்தனம் வலிமையாக இருப்பதைக் காணமுடிகிறது.

கடந்த 30 ஆண்டு கால போராட்டம்; அந்தப் போராட் டத்தில் உயிர் நீத்த ஏகப்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் என்ற துயரத்திற்கு மேலாக வன்னியில்-முள்ளிவாய்க் காலில் நடந்த தமிழின அழிப்பு; அதனைத் தொடர்ந்து மூன்று இலட்சம் தமிழ் மக்கள் முட்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்ட நெட்டூரம்; அவ்வப்போது ஆட்கடத்தல்; சரணடைந்த போராளிகள் காணாமல்போன சோகம் என்ற பேரிழப்புகளை தமிழினம் சந்தித்தது.

உலகில் நடந்த மிகப்பெரிய மனிதப் பேரவலம் என்று வர்ணிக்கப்பட்ட வன்னிப் போர் அழிவுகளை கண்டும் அமைதியாக இருந்து பார்த்த ஐ.நா சபை இப்போது தமிழர்களைப் பாதுகாக்க தவறிவிட்டோம் என வருத் தம் தெரிவிக்கிறது.

காலம் கடந்து, ஐ.நா தெரிவிக்கும் கவலை உயிரி ழந்தவர்களை மீட்டு வரவா போகிறது?

அவர்கள்தான் இப்படி நடந்து விட்டார்கள் என் றால், தமிழர்கள் நம்பிக்கையோடு பாராளுமன்றத்திற்கு அனுப்பியவர்கள் சர்வதேச விசாரணையை வலி யுறுத்தாமல் விடுவதற்காக, எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியை காணிக்கையாக பொறுப்பேற்றுக் கொண்டனரோ.

இதைப் பார்க்கும் போது 30 வெள்ளிக்காசுக்காக யேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் எவ்வளவோ மேல் எனலாம். ஏனென்றால் ஒரு கட்டத்தில் யேசுவைக் காட்டிக் கொடுத்தது மகா துரோகத்தனம் என்றுணர்ந்த யூதாஸ் தான் செய்த பாவத்திற்காக தற்கொலை செய்து கொண்டான்.

ஆக, முப்பது வெள்ளிக்காசுகளில் ஆசை கொண்ட யூதாஸிடம் சுய மனச்சாட்சி இருந்தது. அதனால்தான் தான் செய்த பாவ பழிக்காக அவன் தன்னுயிரை மாய்த்துக் கொண்டான்.

ஆனால் இங்கோ பல்லாயிரக்கணக்கானவர்க ளின் குருதியை; குற்றுயிராய் கிடந்து துடிதுடித்து அவ லமாய் இறந்தவர்களின் வேதனையை தானமாக்கி தலைமைப் பதவி பெறப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு இப்போது என்ன தேவை இருக்கிறது? நான் இறப்பதற்கு முதல் எதிர்க் கட்சித் தலைவராக இருந்து காட்டுவேன் என்ற தனிப் பட்ட சபதத்தை இது நிறைவேற்றுமேயன்றி, தமிழர்க ளுக்கு எந்தத் தீர்வையும் பெற்றுத் தர இப்பதவி உதவ மாட்டாது.

மாறாக இந்தப் பதவியை பெற்றதற்காக சர்வதேச விசாரணை இலங்கை அரசுக்கு தானமாக கொடுக்கப் பட்டு விட்டு என்பதுதான் உண்மை.

பரவாயில்லை அமிர்தலிங்கம் போல நானும்... என்ற நினைப்போடு செயற்பட்டால், எதிர்க்கட்சித் தலை வர் என்று சபாநாயகர் அறிவித்த பின்பு உரையாற்றிய சம்பந்தர் வன்னியில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்துகிறேன் என்று கூறியிருந்தால் தமிழினம் சம்பந்தரின் காலைத் தொட்டு வணங்கியிருக்கும். அல்லது வன்னியில் உயிரிழந்த உறவுகளே உங்களுக்கு அஞ்சலி என்று குரலெடுத்திருந் தால் சம்பந்தன் எங்கள் தலைவன் என்று தமிழர்கள் ஆனந்தக் கண்ணீர் விட்டிருப்பர். என் செய்வோம்...

ஓ! யேசுபிரானே தமிழர்களிடம் இருக்கக்கூடிய யூதாஸ்களுக்கு உன் உடலையும் குருதியையும் கொடுத்து அவர்களை புனிதமாக்கும். இல்லையேல் அவர்கள் மனிதக்குருதிகளை பதவிகளாக மாற்றி இன த்தை அழிப்பர். பரம பிதாவே தடுத்து அருள் செய்யும்.

## அருள்நெறி விழா

நல்லூர்க்கந்தன் ஆலய உற்சவ கால த்தையொட்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தி வரு கின்ற யாழ்.மாவட்ட அறநெறிப் பாட சாலை மாணவர்களின் கலை நிகழ்வு கள் அரங்கேறும் அருள்நெறி விழா தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை இந்து சமய கலாசார அலுவல்கள் திணை க்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வடக்கு மாகா ணத்தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.பிரணவநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப் பிக்கவுள்ளார்.

இதன்போது வரவேற்புரையினை யாழ். மாநகரசபை அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் நிகழ்த்தவுள்ளார். கலைநிகழ்வுகளாக திக்கரை அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் பஜனை மற்றும் க.சரவணபவன், இ. தாஸ், பூ. ரூபிகா ஆகிய மாணவர்கள் வழங்கும் பேச்சு, கிழவன்காடு அற நெறிப் பாடசாலை மாணவர்கள் வழங் கும் குழுநடனம், நாடகம் மற்றும் அ.ஜசி ந்தினி, அ.ஜெயந்தினி, சி.திவ்யப்பிரி யன் ஆகிய மாணவர்கள் வழங்கும் பேச்சு, தொல்பரம் ஆதி முத்துமாரி அம் மன் அறநெறிப் பாடசாலை மாணவர் கள் வழங்கும் வில்லிசை மற்றும் ந. பிரியங்கா- தனிநடனம், கைலாச நாதர் வேத சிவாகம அறநெறிப் பாடசாலை மாணவி சி.சாம்பவி- தனிநடனம், செல் லக்கதிர்காமம் அறநெறிப் பாடசாலை மாணவிகளான ச.திலக்சனா, த.அஜ ந்தா ஆகியோரது தனி நடனம் என்பன இடம்பெறவுள்ளன. (இ-5)

## இசைப்பேருரை

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தையொட்டி நல்லூர் சைவமகா சபையின் ஏற்பாட்டில் கந்தபுராணத் தொடர் இசைப்பேருரை தினமும் மாலை 6.45 மணிக்கு நல்லை ஆதீன குரு மூர்த்த ஆலய மண்டபத்தில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியா னந்தசர்மாவினால் வழங்கப்பட்டு வரு கின்றது. இன்று தாரகன் வதம் எனும் கந்தபுராணத் தொடர் இசைப்பேருரை இடம்பெறும். (இ-5)

## தெய்வீக இசையரங்கு

நல்லூர்க்கந்தன் உற்சவ காலத்தை யொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல் லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தி வருகின்ற தெய்வீக இசையரங்கு தின மும் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை வயலின் இசை இடம் பெறவுள்ளது.

இதன்போது வயலின்-சு.கோபிதாஸ் மற்றும் திருமதி உமா வைகுந்தன், மிரு தங்கம்-பிரம்மஸ்ரீ வி.ரமணா, கடம்-கு.ரவிசங்கர், கெஞ்சிரா-பிரம்மஸ்ரீ ந. சிவசுந்தரசர்மா, முகர்சிங்-சி.செந்தூரன் ஆகியோர் பங்குபற்றுகின்றனர். (இ-5)

### கனகரத்தினம் சுவாமிகளின் 93 ஆவது வருட குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் சிவகுருநாத குரு பீடம் வேதாந்த மடத்தில் ஸ்ரீமத் கன கரத்தினம் சுவாமிகளின் 93 ஆவது வருட குருபூசை நிகழ்வு நாளைமறுதினம் 06ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

முன்னதாக தாவடியூர் கே.எஸ்.ஆர் திருஞானசம்பந்தனின் திருமுறை விண்ணப்பம் நடைபெற்று தொடர்ந்து சுவாமிகள் சமாதிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளது.

மேலும் சிவத்தமிழ் வித்தகர் சிவ. [illegible] பொழிவும் இடம் பெறவுள்ளது. (செ)

# கைத்தொழில் கண்காட்சி இன்று ஆரம்பமாகின்றது

வடமாகாண சபை தொழிற்றுறைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கைத் தொழில் கண்காட்சி மற்றும் போட்டிகள் என்பன இன்று வெள்ளிக்கிழமை ஆர ம்பமாகி தொடர்ச்சியாக நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை வரை யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியா லயத்தில் நடைபெறவுள்ளது.

கைத்தறி மற்றும் கைவினைப் பொரு ட்களை உற்பத்தி செய்யும் வடமாகாண உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண தொழிற்றுறைத் திணைக்களமானது தேசிய அருங்கலை கள் பேரவையுடனும் மற்றும் புடை வைக் கைத்தொழில் திணைக்களத்து டன் இணைந்து வருடாவருடம் கண் காட்சியும் போட்டியும் நடத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கான பரிசில்க ளும் சான்றிதழ்களும் வழங்கி வருகி ன்றது.

அதற்கமைவாக இவ்வாண்டும் மாகாண கைத்தொழில் கண்காட்சி யும் போட்டியும் எமது திணைக்களத் தினால் நடத்தப்பட்டு தெரிவு செய்யப்ப டுகின்ற ஆக்கங்கள் தேசியமட்டப் போட் டிக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் மாகாண மட்டத்தில் பெறுமதிமிக்க பரி சில்களும் சான்றிதழ்களும் வழங்கப் படவிருக்கின்றன.

இன்று ஆரம்பமாகவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முத லமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள் ளவுள்ளார். அத்துடன் நாளை ஞாயிற் றுக்கிழமை நடைபெறவுள்ள இறுதி நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநா தன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள் ளதுடன் சிறப்பு விருந்தினராக வடமா காண முதலமைச்சரின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (இ-5)

## ஆன்மிக அருளுரை

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தையொட்டி யாழ்ப்பாணம் சின் மயாமிஷன் நடத்தும் இந்துவாக வாழ் வோம் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக் கிரத சைதன்யா சுவாமியினால் வழங் கப்பட்டு வருகின்ற ஆன்மிக அருளுரை தினமும் இரவு 7.15 மணி தொடக்கம் 8 மணிவரை நல்லூர் வடக்கு மகேஸ் வரன் மணிமண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் நான் காணும் ஆன்மிகம் எனும் அருளுரை இடம் பெறும். (இ-5)

**சின்மயா மிஷன்**

**நல்லூர் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வலம்புரி பத்திரிகையின் இணை அனுசரணையுடன் இணைந்து நடத்தும் இந்துவாக வாழ்வோம் வினாவிடைப்போட்டி**

வினா: 8) a) புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகி என்ற வாசகத்தை குறித்து நிற்கும் படம் எது?

b) (I) மேற்கூறிய வாசகம் எந்த புராணத்தில் உள்ளது?

(II) இதை அருளிச் செய்தவர் யார்?

(III) உமக்குத் தெரிந்த இதை அருளிச்செய்தவர் இயற்றிய வேறு ஒரு பாடல் தொகுப்பினை தருக?

**வினாக்களுக்கான விடைகளை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் நடைபெறும் இந்துவாக வாழ்வோம் கண்காட்சியைப் பார்வையிடுவதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.**



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### சகா: உங்களுடைய நம்பிக்கைக்கு உகந்த புலன்

வடமொழியில் மூன்று சொற்கள் உள்ளன. ஸுகா அதாவது மகிழ்ச்சி; துக்கா அதாவது துக்கம்; ஸகா அதாவது தோழன். இந்த மூன்று சொற்களிலும் பொதுவாக வரும் எழுத்து; கா (முாய) இதற்குப் புலன்கள் என்று பொருள்.

புலன்களின் வாயிலாக ஆன்மாவானது உலகை அனுபவிக்கின்றது. ஆன்மாவுடன் புலன்கள் இருக்கும் போது, அதுவே சுகா (மகிழ்ச்சி). ஏனென்றால் ஆன்மாதான் அனைத்துச் சுகங்களுக்கும் சந்தோஷங்களுக்கும் மூலம் (பிறப்பிடம்) புலன்கள் ஆன்மாவை விட்டு விலகி மண்ணில், உலகப் பொருளில் ஈடுபாடு கொண்டால் அதுவே துக்கா (துன்பம்) மண்,துன்பம், மனம் இவையெல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை.

ஆன்மாவின் இயல்பு ஆனந்தமாக இருப்பது (சுகா).புலன்கள் நுகரும் பொருட்கள் எல்லாம் ஆன்மாவிடம் உங்களை அழைத்துச் செல்லக்கூடி யவை. ஒரு இன்பமான அனுபவத்தின்போது கண்களை மூடிக்கொள் கிறீர்கள். மலரின் மணத்தை நுகரும்போது, சுவைக்கும்போது, சுகமான ஒன்றைத் தொடும்போது எது உங்களை ஆன்மாவிடம் அழைத்துச் செல்கிறதோ அதுதான் (சுகா) ஆனந்தம்.

எது உங்களை ஆன்மாவை விட்டு விலகித் தூர அழைத்துச் செல்கிறதோ அது துக்கம். துன்பம் என்றால் உங்களை ஆன்மாவிடம் செல்லவிடாது இழுக்கும் பொருளில் நீங்கள் சிக்கிக் கொண்டிருக்கிறீர்கள்.

உங்களுடைய எல்லாச் சுக துக்கங்களிலும் தோழனாக இருப்பவன் சகா. ஞானம் உங்களின் தோழன், ஆசான் ஞானத்தின் உரு. இவ்வுலக மாயைகளில் நீங்கள் சிக்கிக்கொண்டால் அவருடைய ஞானம் உங்களை அதிலிருந்து வெளியேற்றி மீண்டும் ஆன்மாவின் பால் வழி நடத்திச் செல்கிறது.

அவர் புலன்கள் என்றும்கூட ஸகா (ஸ-கா) பொருள்படும். ஸகா என்பவர் உங்களுடைய புலன்களாகி உள்ளார். அவர் மூலம் நீங்கள் ஞானத்தைப் பெறுகிறீர்கள் என்று பொருள். அவர் உங்களுடைய ஆறாவது புலன். உங்களுடைய மனத்தை நம்புவதைப்போல் அவரை நீங்கள் நம்புங்கள். சாதாரணமாக ஒரு நண்பன் உங்களுடைய புலன்களுக்கு ஒரு பொருளாக இருக்கலாம். ஆனால் ஒரு ஸகா உன்னுடைய புலன்களாகவே ஆகிவிடுகிறார்.

“அவர் என்னுடைய புலன்கள், அவருடைய ஞானத்தின் வாயிலாக நான் உலகைப் பார்க்கின்றேன்” என்பது ஸகாவின் பொருள்.

உங்கள் தலை இறுதியில் மண்ணில் அடக்கமாகப் போகிறது. உயிரோடிருக்கும் தலையில் மண்ணைப் போட்டுக்கொள்ளாதீர்கள்! குருவின் ஞானத்தின் மூலமாக உலகைக் காணுங்கள். அப்போது முழு உலகத்தையும் தெய்வீகமாகக் காண்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பிறிமியர் லீக் வெற்றிக்கிண்ணம் ஸ்கந்தாஸ்ரார் அணி 2ஆவது வெற்றி

யாழ்.பிறிமியர் வெற்றிக் கிண்ணத்திற்கான யு.ஆர் பவுண்டேசன் 3ஆவது ஆண்டாக நடத்தும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப் பாட்ட சுற்றுப் போட்டியில் ஸ்கந்தாஸ்ரார் அணி விங்ஸ் அணியை 63ஓட்டங்களால் வெற்றி பெற்று தங்களது 2 ஆவது வெற்றியைப் பதிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தாஸ்ரார் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்கினை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது. சஞ்சுன்தன்-23, காதியோன்-17, துபிசன்-27, பென்யோய்-21, துவாரகன்-34, சின்துஜன்-10, ஓட்டங்களைப் பெற்றனர்.



களத்தடுப்பில் விங்ஸ் சார்பாக மைக்கல்-01, ஜெயந்திரன்-01, ஜெரி-01 இலக்கினைக் கைப்பற்றினர். பதிலுக்கு களமிறங்கிய விங்ஸ் அணி 20 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களை பெற்றது.

ஜெரி-18, ஜெரிபோசன்-10, சுரேன்-19 ஓட்டங்களைபெற்றனர். சிந்துஜன்-01, புருசோத்மன்-01, காத்தியேன்-04, இலக்குகளை கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட் டுக்கழகம் நடத்தும் ஜோர்ஜ்வெப்ஸ்ரர்வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வுக்கு ஸ்கந்தாஸ்ரார் அணி 4.13 புள்ளிகளையும் யூனியன்ஸ் அணி 1.47 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)

# தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்ற முல்லை.மாணவர்கள்

## ஆம்ஸ்ரோங் வி.கழகத்தால் கௌரவிப்பு



பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டத்திலான விளையாட்டுப்போட்டிகளில் பதக்கம் வென்ற மாணவர்களை முல்லை. ஆம்ஸ்ரோங் விளையாட்டுக்கழகத்தினர் சிறப்பித்தனர்.

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டத்திலான விளையாட்டுப்போட்டிகளில் பதக்கம் வென்ற மாணவர்களை சிறப்பிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத் திணைக்களத்தில் பயிற்சி மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் குத்துச் சண்டை, கராத்தே, ரைக்வொன்டோ, யூடோ மற்றும் மல்யுத்தம் உள்ளிட்ட விளையாட்டுக்களில் கலந்து கொண்டு தங்கம், வெள்ளி, வெண்கலம் என 18 பதக்கங்களை முல்லை மாவட்டத்துக்கு பெற்றுத் தந்த மாணவ வீர வீராங்கனைகள் பாராட்டப்பட்டதோடு அவர்களுக்கான சிறியளவிலான பரிசுப்பொருட்களும் வழங்கப்பட்டன.





முல்லை.ஆம்ஸ்ரோங் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்து கொண்டதோடு, ஆம்ஸ்ரோங் கழகத்தின் தலைவர் தர்சிகன், செயலாளர் நிக்சாந்தன், பொருளாளர் அனிஸ்ரன், உபசெயலாளர் செல்வகுமார், மல்யுத்த ஆசிரியர் அந்தோனிப்பிள்ளை, மாணவர்கள், பெற்றோர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

பயிற்றுவிப்பாளர் வள்ளுவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்ட ரவிகரன் தனது உரையில்,

கடந்த காலங்களில் விளையாட்டிலும் கல்வியிலும் இம்மண் பல்வேறு அடைவுகளை கண்டுள் ளது. கராத்தே, மல்யுத்தம், குத்துச் சண்டை, சிலம்பாட்டம், கபடி, தாச்சி, எல்லே உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுக்களில் இம்மண்ணுக்குரியவர்கள் பல சாதனைகளை நிலைநாட்டியிருக்கின்றனர்.

அந்த வரலாற்றை தொடரும் வகையில் இனிவரும் காலங்களிலும் எமது அடைவுகள் இன்னும் வினைத்திறனாகவேண்டும்.

கல்வியிலும் விளையாட்டிலும் இன் னும் பல அடைவுகளை எம் தாயகப்பிள்ளைகள் பெற்று இந்த மண் ணுக்கான பெருமையை காக்க வேண்டும்.

தேசிய மட்டப்போட்டிகளில் சாதனை படைக்கும் வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் சென்ற ஆண்டு எனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் மூலம் ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது.

இவ் வாண்டு அந்த ஊக்குவிப்புத் தொகை இரண்டு இலட்சம் ஆக்கப்பட்டுள்ளது. முயற்சிகளை மேம்படுத்துங்கள்.

நாம் என்றும் உறுது ணையாக உடனிருப்போம் என்று தெரிவித்ததோடு பதக்கம் வென்ற மாணவர்கள் அவர்களை பயிற்றுவித்த பயிற்று விப்பாளர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் வாழ்த்துகளை தெரிவித்தார்.

**பதக்கம் வென்ற மாணவர் விபரம்**

ஜென்சன் - தங்கம்
நாகேந்திரன் - தங்கம்
தர்சிகன் - வெள்ளி
பினேகாஸ் - வெள்ளி
செல்வி டிலக்சனா - வெள்ளி
செல்வி கிருஸ்ணவாணி - வெள்ளி
செல்வி தர்சிகா - வெள்ளி
ஆதவன் -வெண்கலம்
ஜீவா - வெண்கலம்
சம்சன் - வெண்கலம்
செல்வி லோஜி - வெண்கலம்
செல்வி உதயநந்தினி - வெண்கலம
செல்வி தனுஸ்கா - வெண்கலம்
மிதுஜன் - வெண்கலம்
ரூபன் - வெண்கலம்
ஜெகதீஸ்வரன் - வெண்கலம்
சுதாகர் - வெண்கலம்
செல்வி சந்திரலேகா - வெண்கலம் (க)

# யாழ்.மாவட்ட அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் நேற்று ஆரம்பம்

யாழ் மாவட்ட அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்திற்கான போட்டிகள் நேற்று ஆரம்பமாகியது.

நேற்று முதலாவது போட்டியாக கரம் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்று மேலும் இன்றைய தினம் நடைபெறும்.



பூப்பந்தாட்டம் எதிர்வரும் 7 மற்றும் 8ஆம் திகதிகளில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்திலும் யாழ் இராணுவ நிதிமன்ற மைதானத்திலும், உதைபந்தாட்ட போட்டிகள் எதிர்வரும் 14 மற்றும் 15ஆம் திகதிகளில் யாழ் குருநகர் பாடுமீன் விளையாட்டு மைதானத்திலும் பாசையூர் சென் அன்ரனி மைதானத்திலும் இடம் பெறவுள்ளது.

வலைப்பந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டு மைத்தானத்தில் இடம் பெறவுள்ளதுடன் கயிறு இழுத்தல் போட்டி எதிர்வரும் 24ஈம் திகதி யாழ் ஸ்ரான்லி கல்லூரியிலும் மேலும் சதுரங்கப்போட்டி யாழ் மாவட்ட செயலகத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி இடம்பெறவுள்ளதுடன் துடுப்பாட்டம் எதிர்வரும் ஒக்டோபர் 1, 2ம் திகதிகளில் மூன்று பிரிவுகளாக GPS மைதானம், யாழ் ஸ்ரான்லி கல்லூரி மைதானம் மற்றும் அரியாலை காசிப்பிள்ளை சனசமூக நிலைய மைதானங்களில் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்கைப்போல் நாடாளுமன்றில் நாடகமாட முடியாது-பிரதமர்

(கொழும்பு)

குரங்கைப் போன்று நாடகமாட வேண்டாம். முன்னைய பாராளுமன்றத்தை போன்று தற்போதைய பாராளுமன்றத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை சபாநாயகர் கரு ஜயசூரிய நியமித்தார்.

இதனையடுத்து பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச சபையில் எழுந்து, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் எம்.பி. குமார வெல்கமவை எதிர்க் கட்சித் தலைவராக நியமிக்க வேண்டும் என 56 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட கோரிக்கை கடிதம் பாராளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் எந்த அடிப்படையில் சம்பந்தன் எதிர்க் கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார்? என கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர் கரு ஜயசூரிய இதுவரை மன்றுக்கு கடிதம் கிடைக்கவில்லை என்றார்.

இதன்போது சபையில் கூக்குரல் எழுந்தபோது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பான தீர்மானத்தை சபாநாயகர் அறிவித்து விட்டார்.

இது தொடர்பில் யாரும் முறையாக எதிர்ப்பு தெரிவிக்க வில்லை. யாரும் குரங்கு போன்று நாடக மாட முடியாது. இப்போதைய பாராளுமன்ற த்தை முன்னைய பாராளுமன்றம் போல் முனனெடுத்து செல்ல முடியாது என்றார். (செ-12)

# குபேரவாசல்...

கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

மேற்படி கும்பாபிஷேக நிகழ்வு குறித்து செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்துள்ள கருத்து வருமாறு,

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லைக்கந்தன் வரலாற்றில் உன்னதமான நாள் இன்று. நூற்றுஎட்டு அடி உயரமான குபேரவாசல் கோபுரம் அமைக்கப்பட்டு இன்று காலை ஆறு மணிக்கு கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

இலங்கையிலுள்ள கோபுரங்களில் புதுமையான வகையில் அமைக்கப்பட்ட தனித்துவமான கோபுரமாக இக்கோபுரம் அமைந்துள்ளது. நவதளங்களைக் கொண்ட இக்கோபுரம் 2012இல் அடிக்கல் நாட்டப்பெற்றது. கடந்த மூன்று ஆண்டுகளில் இவ்வியத்தகு கோபுரம் வேகமாக எழுந்தமை முருகப் பெருமானின் திருவருளே. எவரிடமும் நிதி கோராமல் முருகனின் திருப்பணி அமைதியாக நடைபெற்று முடிவடைந்துள்ளது. ஆலய அறங்காவலர், எல்லாம் முருகனே செய்விக்கிறான் யாம் ஏதும் அறியோம் என அமைதியாகச் சொல்கிறார். சிற்பக்கலைஞர் வீரசிங்கம், முருகன் திருவருளால் கோவில் எஜமானர் சொல்வதைச் செய்கிறோம் எனப் பணிவுடன் சொல்கிறார். எவ்வித ஆரவாரமுமின்றி முருகப் பெருமானின் பெருங்கோபுரம் எழுந்து நிற்கிறது.

கண்டவர்கள் வியக்கும் வண்ணம் காட்சியளிக்கும் அற்புதக் கோபுரம், நாம் வாழும் காலத்தில் அடிக்கல் நாட்டப்பெற்று பூர்த்தியாகி கும்பாபிஷேகம் காணும் பேறு நமக்குக் கிடைத்தது முன் செய்த தவப்பயனே.

செல்வத்தின் அதிபதி குபேரன். வடதிசையின் காவலன் குபேரன். எட்டுத்திக்குப் பாலகர்களிலொருவராகிய குபேரன், சிவபெருமானின் பேரருளைப் பெற்றவன். கொடுப்பதில், உபசரிப்பதில் வல்லவன். வடதிக்கில் வீற்றிருந்து சகல செல்வங்களையும் காக்கும் குபேரன் மிகவும் பிரசித்தி பெற்றவன். இலங்காபுரியை இராவணனுக்கு முன் ஆண்டவன். இம் மண்ணை குபேரபுரியாக நிறைசெல்வத்தோடு வாழவைத்தவன். அவன் வீற்றிருக்கும் திசையில் எழுந்த இக்கோபுரத்தைத் தரிசித்தால் எல்லாச் செல்வமும் கிடைக்கும் என்பது ஐதீகம். திருப்பதி ஏழுமலையானுக்கு கோவில் கட்ட குபேரன் கடன் கொடுத்தான் எனப் புராணங்கள் கூறுகின்றன. இன்றும் திருப்பதியில் வடதிசையிலுள்ள உண்டியல் குபேரகாணிக்கை எனக்கூறும் வழக்கமுண்டு. குபேரன் நவநிதிகளின் அதிபதி. பத்மம், மகாபத்மம், மகரம், கச்சபம், குமுதம், நந்தம், சங்கம், நீலம், பத்மினி ஆகிய நவநிதிகளின் அதிபதியாகிய குபேரன் பெயரில் அவன் திசை நோக்கி அமைக்கப்பட்ட கோபுரத்தின் குடமுழுக்கைக் காண்பதற்கு அனைவரும் பக்தியோடு திரண்டு வாருங்கள் நல்லூரானின் அருள்மழையில் நனைந்து, குபேரவளம் பெறுவோமாக என சொஞ்சொற் செலவர் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

# அரியாலையில்...

அரியாலை புங்கன்குளம் பகுதில் இடம் பெற்ற புகையிரத விபத்தொன்றில் புத்தூர் பகுதியினை சேர்ந்த இருபத்தியொரு வயதுடைய இளைஞர் உடல் சிதறி பல துண்டுகளாகிய நிலையில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று பி.ப இரண்டு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் புத்தூர் வடக்கு புத்தூரினை சேர்ந்த ரவிச்சந்திரன் கஜீபன் (21) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார் என அடையாளம் காணப்பட்டுள்ளது. குறித்த இளைஞன் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் கடுகதி புகையிரதம் மோதியே உயிரிழந்துள்ளார்.

பிரஸ்தாப இளைஞன் புகையிரதம் வரும் போது புங்கன்குளம் புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள நடைபாதை கட்டிடத்திற்கு அருகே செல்லும் தண்டவாளத்தில் படுத்திருந்த போது புகையிரதம் ஏறி உயிரிழந்து விட்டதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும் குறித்த சம்பவம் தற்கொலையாக இருக்கலாம் என சந்தேகம் தெரிவித்துள்ள சாவகச்சேரி பொலிஸார் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். மேலும் குறித்த இளைஞன் தண்டவாளத்தின் குறுக்காக படுத்திருந்ததனால் பல துண்டுகளாக உடல் சிதறி பலியாகியுள்ளார். (செ-4)

# அமைச்சர்களை...

தேசிய அரசாங்கத்தை உருவாக்குவதற்காக இந்த எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பான பிரேரணையை பிரதமர் நேற்று சபையில் சமர்ப்பித்திருந்தார்.

இந்த பிரேரணைக்கு ஆதரவாக 143 வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தன.

அதற்கு எதிராக 16 வாக்குகள் மாத்திரமே கிடைத்தன. (செ-12)

# அரசுக்கு 56 ஐ விட...

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அதேவேளை இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, நாட்டுக்கு துரோகம் செய்யும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை செயற்படுத்த அரசாங்கம் பலவீனமாக எதிர்க்கட்சி ஒன்றை நியமித்துள்ளது. இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்த பெரும் வெற்றி எனவும் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, தமிழ் பிரிவினைவாதத்திற்கு அரசாங்கம் அடிபணிந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்கியதன் மூலம் இது தெளிவாகியுள்ளது எனக் கூறியுள்ளார். (செ-12)

# நாடாளுமன்ற...

கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் வேண்டுகோள்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

இதன் காரணமாக நாடாளுமன்றத்தில் ஆகக்கூடிய ஆசனங்களை பெற்றுள்ள இலங்கை தமிழ் அரசு கட்சியின் சார்பில் இரா. சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க தீர்மானித்துள்ளதாக சபாநாயகர் அறிவித்தார்.

இதன்படி இலங்கையின் எட்டாவது நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன் கடமையாற்றவுள்ளார்.

தமிழ் அரசியல் தலைவர் ஒருவர் இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பது இது இரண்டாவது முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் ஏ.அமிர்தலிங்கம் 1977ஆம் ஆண்டு முதல் 1983 ஆண்டு வரை எதிர்க்கட்சித் தலைவராக செயற்பட்டிருந்தார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நாடாளுமன்றத்தில் 16 ஆசனங்கள் கிடைத்தன.

சம்பந்தர் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-12)

# சர்வதேச...

வவுனியாவில் இடம்பெற்ற பாராளுமன்ற உறுப்பினரர்களை வரவேற்கும் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்,

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்த மக்களுக்கு எமது நன்றிகள். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான எமது கட்சியின் வடமாகாண சபை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மூலம் கிடைக்கப் பெறும் வருடாந்த நிதி நான்கு கோடியே நாற்பது லட்சம் ரூபாய் மக்களுடைய தேவைகளை நிறைவேற்றித் தருவதற்கு பயன்படுத்தப்படும்.

கடந்த 30 வருடகாலத்தில் ஏற்பட்டிருக்கின்ற சொத்தழிவுகள், உயிரழிவுகள், காணாமல் போனோர் விவகாரம், நீண்ட காலமாக சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விவகாரம், மீள்குடியேற்றம், இராணுவம் அபகரித்துள்ள காணி விவகாரம் போன்ற விடயங்கள் இந்த ஐந்து வருட காலத்தில் மிகுந்த சவால் நிறைந்த பணியாக இருக்க போகின்றது. ஐக்கிய தேசிய கட்சியும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் இணைந்து ஒரு தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்திருக்கின்றார்கள்.

ஆகவே இந்த தேசிய அரசாங்கம் தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான ஒரு காத்திரமான பணியை முன்னெடுக்கும் என நம்புவதாக தெரிவித்தார். எமது அன்றாடப் பிரச்சினைகளிலிருந்து நிரந்தர தீர்வை, நிரந்தரமான அபிவிருத்தியை காண்பதற்காக இன்னும் நாங்கள் மிகக் கடினமாக உழைக்க வேண்டியிருக்கின்றது.

நாங்கள் ஒன்று சேர்ந்து உழைக்கின்ற போது நாங்கள் அந்த இலக்கை அடைய முடியும். இறுதி யுத்தத்தில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல் தொடர்பாக ஒரு சர்வதேச விசாரணை கோரியே தமிழ் மக்கள் எங்களுக்க வாக்களித்திருந்தார்கள். ஆனால் எங்களில் இருக்கக்கூடிய ஒரு சிலர் கூறுகிறார்கள் சர்வதேச விசாரணை ஒன்று நடைபெற்று முடிந்தவிட்டது. மீண்டும் என்ன ஒரு சர்வதேச விசாரணை என மக்களை குழப்புகிறார்கள். எம்மில் சிலர் இப்படியான கருத்துக்களை தெரிவிப்பது எமக்கு மன வேதனையளிக்கிறது.

தமிழ் மக்களை கொலை செய்தவர்களே விசாரணை செய்தால் எமக்கு நீதி கிடைக்காது.

மகிந்த ராஜபக்ஷ காலத்திலே ஓர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டு அந்த ஆணைக் குழுவின் அறிக்கைகள் எல்லாம் கிடப்பிலே போடப்பட்டுள்ளது எந்த நீதியும் வழங்கப்படவில்லை. கடந்த 60 வருட காலத்தில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி வழங்கப்படவில்லை யென்பதை அனுபவ ரீதியாக உணர்ந்துள்ளோம். யுத்தம் முடிவடைந்து ஆறு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் பல தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை கணவன்மார்களை தேடித் திரிகிறார்கள். இவர்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும். அதற்கு சர்வதேச விசாரணை தேவை என வலியுறுத்தவேண்டும்.

தமிழ்தேசிய கூட்டமைப்பானது பல மான கட்சியாக மாற்றம் பெற பதிவு செய்யப்பட வேண்டும். அதற்காக குரல் கொடுக்க வேண்டும். தமிழ்த் தேசிய கூட்ட மைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமையில் இன்றைக்கு 15 வருடங்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு ஒரு யாப்பு இல்லை. எந்தவிதமான பலமான ஒரு கட்டமைப்பும் இல்லை. கூட்டமைப்பின் பேரால் ஒரு கட்சி தன் நலன்சார்ந்து செயல்படுவது தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்குள் மனக்கசப்புக்களை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே பொதுமக்கள் தமிழரசுக் கட்சிக்கும் சம்பந்தனுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது பதிவுசெய்ய ப்பட வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டார். (செ-250,12)

# மரண அறிவித்தல்

## தவராசா சறோஜாதேவி (ராணி)



வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியை பிறப்பிடமாகவும் புதுக்காடு இராமநாதபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட தவராசா சறோஜாதேவி (ராணி) அவர்கள் 03.09.2015 நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தவராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகராசா-நகுலாம்பிகை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பூரணம் ஆகியோரின் அன்பு மருமகளும் திருச்செல்வம், ராதாதேவி, காலஞ்சென்ற வைகுந்தவாசன், முனீஸ்வரன், தையல்நாயகி, மகேந்திரன், நல்லைநாதன், பாலகிருஸ்ணன் ஆகியோரின் அன்பு சகோதரியும், லலிதாதேவி, நாதன், செல்வநாயகி, விக்கினேஸ்வரன், கமலராணி, சுபாசினி, குகனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், ஜெயந்திமலர் (பரிசாரகர்-கிளி.வைத்தியசாலை), கோகுலன் (மரக்கறி வாணிபம்- வட்டக்கச்சி), காலஞ்சென்ற குகதாஸ் மற்றும் சுஜிதா, நித்தியா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம்-கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்மராசன் (கரன்), பாமினி, முரளிதரன், ரவீந்திரன் (சேக்கிள்) ஆகியோரின் அன்பு மாமியும், கயாளினி, பகலவன், கயல்விழி, தரணிகன், நாவரசன், இன்பரசன், மகில், தமிழ்ரங்கன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புதுக்காட்டில் உள்ள அவரது இல்லத்தில் இன்று 04.09.2015 நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11 மணியளவில் இராமநாதபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-மகன் கோகிலன்

(சி-2018)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடி - சந்திரிகா சந்திப்பு



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க புதுடெல்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நேற்று சந்தித்துப் பேசியுள்ளார். புதுடெல்லியில் நடக்கின்ற அனைத்துலக இந்து - பௌத்த மாநாட்டிற்கு சென்ற வேளையிலேயே இச் சந்திப்பு இடம் பெற்றுள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அமைச்சர்கள்...

சனத்தொகையைக் கொண்ட அண்டை நாடான இந்தியாவில் 65 அமைச்சர்களும், 38 ராஜாங்க அமைச்சர்களுமே பதவிவகிக்கின்றனர்.

இலங்கை போன்ற சிறிய நாட்டில் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது பொருத்தமாகாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மிகுந்த பணிவுடன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்றுக்கொள் வதாகத் தெரிவித்த சம்பந்தன் அனைத்து கட்சிகளுடனும் இணைந்து செயற்பட விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## கொலைக் குற்...

சாள்ஸ் விஜயவர்த்தன என்பவரை கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில், உடுவில் தெற்குப் பகுதியை சேர்ந்த பாலசிங்கம் பிரவீன் சுஹறாஜ் (பவனிதரன்) என்பவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது.

சந்தேகநபர் தன்னை சுத்தவாளி என தெரிவித்ததையடுத்து தொடர்ந்து இந்த வழக்கு விசாரணைகள் நடைபெற்றது.

கடந்த 2013ஆம் ஆண்டு ஜுலை மாதம் 17ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்.மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது.

மேல் நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம்பெற்று, நேற்றையதினம் வழக்கின் தீர்ப்புவழங்கப்பட்டது.

குறித்த சந்கேநபர்தான் கொலை செய்தார் என்பதற்கு நேரில் கண்ட சாட்சியங்கள் இல்லையெனவும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கான சாட்சியங்களும் இல்லையெனவும் நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் வழக்குத் தொடருநர் குற்றத்தை எண்பிக்கத்தவறி விட்டார் எனவும் குறிப்பிட்டு சந்கேநபரை நிரபராதியென தீர்ப்பளித்து நீதிபதி விடுதலை செய்தார். (செ-9)

## யாழில் இன்று...

கந்தர்மடம் மணல்தரை லேனில் அமைந்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே செயற்பாட்டுக் குழுவின் தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன் மேற்படி போராட்டம் குறித்து தெரிவித்தார்.

தொடர் போராட்டமாக முன்னெடுக்கப்பட்டு இறுதியில் இக்கையெழுத்து அடங்கிய மகஜரினை ஐக்கிய நாடுகள் சபையின் மனித வுரிமை ஆணையாளருக்கு அனுப்பிவைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை அரசு கடந்த காலங்களிலும் தற்போதும் தமிழர்கள் மீது மேற்கொள்கின்ற இன அழிப்பு நடவடிக்கைகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணைகுழு சர்வதேச ரீதியிலான விசாரணை ஒன்றினை மேற்கொண்டிருந்தது.

இவ்விசாரணை அறிக்கை இம் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா மனிதவுரிமை கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவிருந்த நிலையில்,

ஆரம்பத்தில் இலங்கை மீது போர்க்குற்ற பிரேரணையை கொண்டுவந்து சர்வதேச விசாரணைக்கு வழிவகுத்த அமெரிக்கா இலங்கையில் புதிய ஆட்சி வந்தவுடன் இலங்கை தொடர்பில் தனது நிலைப்பாட்டிலிருந்து மாற்றமடைந்து உள்ளக பொறிமுறைக்கு ஆதரவளிக்கப்போவதாக அண்மையில் இலங்கை வந்திருந்த அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்க செயலர் நிசா தேசாய் பிஸ்வால் இதனை உறுதி செய்துள்ளார்.

இந்நிலையில் வடக்கு கிழக்கு சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து கட்சி பேதமற்ற புதியதொரு அமைப்பை ஏற்படுத்தி அதனூடாக போராட்டங்களை முன்னெடுத்து இலங்கை மீது சர்வதேச குற்றவியல் பொறிமுறை ஒன்றினை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சபையினை கோருவது என்றும் நேற்று தீர்மானிக்கப்பட்டது.

இதனடிப்படையில் வடக்கு கிழக்கில் உள்ள பொது அமைப்புக்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், கல்விமான்கள், தமிழ் அரசியல் தரப்பினர் ஒன்றிணைந்து சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக்குழு (Tamil Action Committee for International Accountability Mechanism [TACIAM]) என்ற குழுவினை நேற்றையதினம் அங்குரார்ப்பணம் செய்திருந்தனர்.

இக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று மணல் தறையில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பில், இலங்கை மீதான சர்வதேச பொறிமுறையை முன்னிலைப்படுத்தி தமிழர் தாயகம் எங்கும் போராட்டங்களை முன்னெடுப்பது என்றும் இன்று இப்போராட்டத்தினை யாழ் பஸ்நிலையத்தில் ஆரம்பிப்பதென்றும் குழுவின் தலைவர் பேராசிரியர் சிவநாதன் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக இக்கையெழுத்து போராட்டத்தினை யாழ்.பல்கலைக் கழகம் மற்றும் பொது இடங்கள் என விரிவுபடுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இக்குழுவில் இணைவதற்கு எந்த மட்டுப்பாடுகள் இல்லை எனவும் தமிழ் இனம் மீது அக்கறை கொண்ட எவரும் இணைய முடியுமெனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ் இனம் தனக்கான நீதியினை பெற்றுக்கொள்வதற்கு இறுதி சந்தர்ப்பம் இதுவாகும் இதனை ஒவ்வொரு தமிழனும் நன்றாக புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். இதனை தவறவிட்டால் மீண்டும் நாம் நீதியை பெற்றுக் கொள்ள மேலும் நீண்ட கால அவகாசம் ஏற்படலாம் அல்லது இல்லாமல் போகலாம் என மேற்படி குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். (செ-4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## கண்காட்சியில்...

நபர்களின் கைவிரல் அடையாளங்களை குற்ற விசாரணைப் பிரிவினர திரட்டி தொகுத்துள்ளனர்.

குற்றச் செயல்களுடன் தொடர்படைய 60 ஆயிரம் பேரின் புகைப் படங்களும் திரட்டப்பட்டுள்ளன.

பொலிஸ் திணைக்களத்தினால நடத்தப்படும் கண்காட்சியில், பிரபாகரனின் கைவிரல் அடையாளமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் பிரபாகரன் குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்.

1996-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் திகதி இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிரபாகரனுக்கு 200 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நீதிமன்ற வரலாற்றில் மிக அதிகமாக நபர் ஒருவருக்கு வழங்கப்பட்ட தண்டனைக் காலமாக இது கருதப்படுகின்றது.

தாக்குதலை நடத்திய ரகு என்பவருக்கு பிரபாகரனினால் வழங்கப்பட்ட நினைவுப் பரிசில், பிரபாகரனின் கைவிரல் அடையாளம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிலாம்டீன் என்ற புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர் இதனைக் கண்டு பிடித்திருந்தார்.

1985-ம் ஆண்டு இந்தியாவில் உமாமகேஸ்வரனுடன் இணைந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் பிரபாகரன் கைது செய்யப்பட்ட போது பெற்றுக்கொள்ளப்பட்ட கைவிரல் அடையாளத்துடன், குறித்த நினைவுச் சின்னத்தில் காணப்படும் கைவிரல் அடையாளங்களில் ஒன்று ஒத்துப் போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு லயனல் வென்ட் அரங்கில் இந்தக் கண்காட்சி நேற்று முன்தினம் ஆரம்பமானது.

மறைந்த புகைப்படக் கலைஞர் வில்சன் நாகொடவிற்கு நன்றி பாராட்டும் வகையில் இந்தக் கண்காட்சி நடத்தப்படுகின்றது. (செ-12)

நல்லூர் உற்சவகால விஷேட கட்டணம்
யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்
சென்னை 23700/= Return
Nation popular travels & tours
Mobile 0773083820
#128, Brown Road, Jaffna
128, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
0214920920, 0244930830
(C-2020)
தேசிய பிரபல பயண ஒழுங்கமைப்பு நிறுவனம்

ஒத்திவைக்கப்பட்ட வீட்டுக்கிருத்திய நிகழ்வு



அமரர் சு.பொ.நடராசா
(அதிபர், அண்ணா தொழிலகம்)
கடந்த 05.07.2015 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்த எமது தந்தையாரின் ஒத்திவைக்கப்பட்ட வீட்டுக் கிருத்திய நிகழ்வும் மதிய போசன வைபவமும் எதிர்வரும் 06.09.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராகக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பையே மீளவும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
நன்றி
(C-2019)
அண்ணா தொழிலகம், துரைவீதி, இணுவில்.
இப்படிக்கு குடும்பத்தினர்

ஜீவக வாத தைலம்
Jeewaka Vata Thailaya
முதுகு வலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு, அரிப்பு, எரிவு, நரம்பு சார்ந்த வலி, பாரிசவாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும். வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம். காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.
25ml-150ரூபா 50ml-280ரூபா 100ml-450ரூபா
Manufactured & Marketed by
Jeewaka Herbals
No.17/3, wedagedara'Koskandawala yakkala
Ayu Lic No.6/2/1/02/11BR NO.W/Au/L/3621.
Contact: 071 227 1526
ஏக விநியோகஸ்தர்கள், சிவா நறுமணப் பூங்கா, 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 2567
(C-2015)

வகுப்புக்கள்
O/L இரண்டாம் மொழி (சிங்களம்) வகுப்புக்கள் ஆரம்பம் - 05.09.2015 (வடமராட்சியில்)
(1651)
தொடர்புகளுக்கு : 0777115876

FALC FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH IN NORTH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 985 மாணவர்கள் French கற்றுள்ளனர்.....
உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781
No. 40, பலாலி வீதி. அரிய குளத்துக்கு அண்மையில் ஆரம்பம்: 12.09.15 சனி 8 மணிக்கு
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 12.09 @ 4pm.
கண்டி வீதி, சாவகச்சேரி. ஆரம்பம்: 16.09 @ 4pm
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre
(C-2007)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org